விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 17 புதன்கிழமை (02.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
(C-9214)
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# 47 அத்தியாவசிய உணவு பொருட்களின் வரி நீக்கம்



## விலை குறையும் என எதிர்பார்ப்பு

(கொழும்பு) அரிசி, மா, மீன் உள்ளிட்ட 47 அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கான வரிகள் நீக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நேற்று நடைபெற்ற வாழ்க்கைச் செலவு தொடர்பாக அமைச்சரவை உப குழுவினால் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து தமது தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட பெற்றோலிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர். 24

## மகிந்தவுக்கு ஞாபகம் வரும் புலிகளின் ஆரம்ப காலம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஆரம்ப காலத்தைப் போன்று வடக்கில் தற்போது அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆரம்பம் முதல் எச்சரிக்கை விடுத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

யாழ். கொக்குவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு பொலிஸ் அதி 23

## நிறைவேற்று அதிகாரத்தையும் மீறி மைத்திரி செயற்படுகிறார்

### பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆட்சியை கைப்பற்றுவதற்கு எவர் எத்தனித்தாலும், அதற்கு தனது விருப்பத்தையும் ஆசீர்வாதத்தையும்பெற்றுக்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி 23



### வித்தியா கொலை வழக்கு

## இன்று கூடுகிறது ட்ரயல் அட்பார்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கின் நீதாய விளக்க முறையிலான (ட்ரயல் அட்பார்) விசாரணைகளின் தொடர் விளக்கம் இன்றைய 24

## பொலிஸாரின் விடுமுறை ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் 24

## வடக்கில் சிறப்பான பொலிஸ் சேவைக்கு அரசு முன்வரவேண்டும்

### முப்படைகள் வேண்டாம் என்கிறார் மாவை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியும் பிரதமரும் சிறந்த நிர்வாகத்தையும் நேர்மை பண்புகளையும் கொண்ட பொலிஸாரை வடக்கு கிழக்கு பிரதேசங்களில் நிறுத்தி



போதைவஸ்து கடத்தல், வாள்வெட்டு சம்பவங்களை நிறுத்துவதற்கு முன்வர வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் தேசியக் 23

## நல்லாட்சி அரசாங்கத்தை 2020 வரை பாதுகாப்போம்

### - தமிழ் முற்போக்கு கூட்டணி

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தை 2020ஆம் ஆண்டு வரையில் பாதுகாப்போம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் நல்லாட்சி அரசாங்கத்தை விட்டு 23

## யாழில் 4 வீடுகளில் திருடன் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி மற்றும் ஈச்சமோட்டை ஆகிய பகுதிகளில் நான்கு வீடுகளில் கூரைபிரித்து திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவது முகத்திற்கு 24

## பொலிஸார் மீது வாள்வெட்டு சந்தேகத்தில் இருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

20 வயது மற்றும் 22 வயதுடைய இரண்டு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் கொக்குவில் பகுதியில் கோப்பாய் 24

## பயங்கரவாத விதை எங்காவது முளைத்துக்கொண்டுதான் இருக்கிறது!



### வாள்வெட்டு குறித்து பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கடந்த முப்பது வருடமாக இயங்கிய பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக கூறுவதனை ஏற்றுக் கொள்ள மாட்டேன். அந்த பயங்கரவாத விதை எங்காவது முளைத்துக்கொண்டுதான் இருக்கிறது என பொலிஸ்மா 23

## வடக்கில் இருந்து எவ்வாறு படை முகாம்களை அகற்றுவது?

### அமைச்சர் மகிந்த சமரசிங்க கேள்வி

(கொழும்பு)

அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் எடுத்த எடுப்பில் வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றிவிட முடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

வன்னிப் போரில் சரணடைந்த நிலையில் 24




## சாவகச்சேரியில் தாலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரில் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் தாலி அறுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் ஒரு மணியளவில் சாவகச்சேரி டச்சு வீதி 23

## படையினர் காணி விடுவிப்பு; பிரித்தானியா வரவேற்பு

(கொழும்பு)

பொது மக்களின் கையகப்படுத்தப்பட்ட காணிகளை படையினர் விடுவித்து வருகின்றமை குறித்து பிரித்தானியா வரவேற்பு தெரிவித்துள்ளது.

எனினும் சமூகங்களுக்கு மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு கையகப்படுத்தப்பட்டுள்ள மேலும் பல காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மென்மையாய் பேசுபவரே – அம்மா
பணிவினை கற்பித்தவரே – அம்மா
அன்பு ஒன்றையே நிலையாக தந்து
எப்போதும் எம் நெஞ்சில்
வாழ்கிறீர்கள் – அம்மா
உதவி புரிவதற்கு நீ என்றும் சிந்தித்தவளல்லை
உனக்கு உபத்திரம் செய்தவரை நீ என்றும்
வெறுத்ததுமில்லை
ஆண்டவன் உனை அதிகம் நேசித்து விட்டானோ?
அதனால் தான் உன்னை விரைவாய் அழைத்துக்
கொண்டானோ?
எங்களை இவ்வுலகத்திற்கு அளித்தவரே
இன்று உம் பிரிவால் தவிக்கின்றோம் நாளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்நாளும்
வேண்டுகின்றோம் இறைவனிடம்.

## அமரர் சியாமினி பாக்கியராஜன்

மலர்வு: 19.06.1973 – உதிர்வு: 02.08.2014

தமிழகம்,
சாரையடி, புலோலி.

நீங்கா நினைவுகளுடன்...
கணவன், மகன், மகள்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.இ.ஜெயசேகரன்

யாழ். வணிகர் கழகத்தின் தலைவராக கடந்த பல வருடங்களாக பணியாற்றி வரும் திரு.**இ.ஜெயசேகரன்** வட மாகாண சபை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளமையை அறிந்து யாழ்.வர்த்தக சமூகமாகிய நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

இன்று மாலை 4.00 மணியளவில் யாழ்.வணிகர் கழகத்தில் சத்தியபிரமாணம் எடுக்கும் திரு.**இ.ஜெயசேகரன்** அவர்கள் வணிகர் கழகத்தினை மிகவும் நல்ல முறையில் வழிநடத்தி வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் அரிய பல பணிகளை செய்திருப்பதை அனைவரும் அறிவர். அவரது நேர்மை, தற்துணிவு, புத்திக்கூர்மை, வர்த்தகர்கள் மீதானதும் மக்கள் மீதானதுமான கரிசனை என்பனவே அவரை இந் நிலைக்கு உயர்த்தியுள்ளது. வட மாகாண சபையின் உறுப்பினராக பதவியேற்கும் திரு.**இ.ஜெயசேகரன்** அவர்களை நாம் வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் அனைத்து மக்களுக்கும், வர்த்தகர்களுக்குமான அவரது பணிகள் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

(10000) *வாழ்த்துவோர்* : **யாழ்.வர்த்தக சமூகம்**


# நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

## கலைமாமணி
## Dr.S.S.சர்மா குருஜீ

82/4 கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

**077 784 1558**

(சி. 8817)



**Aaruthal**
**Center for IT & English Language skills Development & Training**

**இளையோர்களே தகவல் தொழில் நுட்பத்துறையில் உட்புகுவதற்கான அரிய வாய்ப்பு**

கல்வித்துறையில் பல வருடங்களாக பல சேவைகளைச் செய்து வரும் அனுபவம் மிக்க ஆறுதல் நிறுவனமானது தகவல் தொழில் நுட்பத்துறையிலும் ஆங்கிலத்திலும் எமது இளம் சமுதாயத்தினருக்கு ஒரு முழுமையான பயிற்சியினை வழங்க முன்வந்துள்ளது. துறைசார் வேலைவாய்ப்பு பெற விரும்புவோர் எமது நிறுவனத்தில் கணணி அடிப்படை மற்றும் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்று பின்னர் தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அல்லது சுயதொழில் ஒன்றைத் தொடங்குவதற்கான அறிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**நடைபெறும் பயிற்சி :**

Computer Literacy & English Language skills Development & Training Programme Include:

01. Information Communication Technology (Syllabus of TVEC - NVQ level 3,4)
02. Desktop Publishing & Graphic Designing (Syllabus of TVEC - NVQ level 4)
03. Communicative English (Syllabus of TVEC - NVQ level 1-3)

After completion of the training the participants surely develop their skills and competent in ICT, English, Personality and Entrepreneurship.

**Duration**: Each 3 months theory and 3 months practical training.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகளை பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பங்களை கீழ் உள்ள முகவரிக்கு தபால் அல்லது மின்னஞ்சல் மூலமாக 18.08.2017க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

**Aaruthal**
No.51, wyman Road,
Nallur, Jaffna.
Phone: 021 221 7092
e-mail: aaruthaltrinco@gmail.com
web: www.aaruthal.lk




Center for Excellence

(சி-9228)


# பொலிஸ்மா அதிபர் கிளிநொச்சி விஜயம்

(பரந்தன்)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் சிவில குழுக்களுடனான சந்திப்பொன்றில் பொலிஸ்மா அதிபர் கலந்து கொண்டார். குறித்த சந்திப்பு நேற்று மாலை கிளிநொச்சி இரணைமடு சந்தியில் அமைந்துள்ள மண்டபத்தில் இடம் பெற்றது.

பொலிஸ்மா அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர், பொலிஸ உப குழுக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(மு-312)

# 31-ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.07.2017 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர்
## வல்லிபுரம் அருளம்பலம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் யாழ். கீரிமலை புண்ணியத் திருத்தலத்தின் கடற்கரையிலும் வீட்டுக்கிரியைகள் 03.08.2017 நாளை வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

கொக்கிளாய், முல்லைத்தீவு.
தொ.பே: 077 413 4479

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

# வல்லிபுர குருக்கட்டுச் சித்தி விநாயகர் மீது பாடப்பட்ட குருக்கட்டான் அருட்பேழை வெளியீட்டு விழா – 16.07.2017









(சி-9229)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவான்-நயினாதீவு இடையிலான படகுச்சேவை பணியாளர்கள் பகிஷ்கரிப்பு

## இன்று முதல் உரிய தீர்வு கிடைக்கும் வரை தொடரும் 'நயினாதீவு எக்ஸ்பிரஸ்' படகுச்சேவையால் வந்தவினை

(யாழ்ப்பாணம்)

**குறிகாட்டுவான்- நயினாதீவுக்கு இடையிலான தனியார் படகுச் சேவையில் ஈடுபட்டுவரும் படகு உரிமையாளர்களும் பணியாளர்களும் இன்று முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.**

நயினாதீவு எக்ஸ்பிரஸ் எனும் புதிய படகு நயினாதீவு விகாராதிபதியால் நேற்றுக் காலை புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப் பட்டதையடுத்தே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியைச் சேர்ந்தவர்களால் நேற்றுக் காலை 8.30 மணியளவில் வெள்ளோட்டத்துடன் ஆரம்பமான நயினாதீவுஎக்ஸ்பிரஸ்படகை சேவையிலிருந்து நிறுத்தும் வரை பகிஷ்கரிப்பு தொடரும் எனவும் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கச் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் புதிய படகு ஒன்று சேவையில் இன்று (நேற்று) இணைந்து கொண்டமை குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் எமக்கு உரிய பதிலைத் தரும் வரையில் இன்று 02.08.2017 புதன்கிழமை காலை6.30மணிமுதல்படகுச் சேவையை இடை நிறுத்துகின்றோம்.

இதனால் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சங்கத்தினரால் யாழ். மாவட்ட அரச அதிபர், வேலணை பிரதேச செயலர், வேலணை பிரதேச சபை செயலாளர் ஆகியோருக்கு மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிகாட்டுவான் நயினாதீவு படகுச் சேவையினை நாம்1935ஆம்ஆண்டு முதல் பிரதேச செயலகம், பிரதேச சபை போன்றவற்றின் கீழ் எமது சங்கத்தின் மூலமாக எவ்விதமான குறையும் இன்றி சீரான சேவையினை நல்கி உள்ளூர், வெளியூர் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் கடல் வழிப் போக்குவரத்தை சிறந்த முறையில் நடத்தி வருகின்றோம்.

தற்போது 01.08.2017 ஆம் திகதி முதல் தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக சுற்றுலாப் பயணிகள் படகு சேவையில் ஈடுபடவுள்ளதாக நாம் அறிகின்றோம். இதுவிடயமாக பிரதேச செயலகமோ, பிரதேச சபையோ எமக்கு தெரியப்ப டுத்தவில்லை. தங்களின் கீழ் பரிபூரணமான சேவையினை வழங்குகின்றோம்.

இச்சங்கத்தின் பிரகாரம் புங்குடுதீவு நயினாதீவைச் சேர்ந்தவர்கள்படகுச்சேவையை நடத்தலாம் என்றும் எழுதப் பட்டுள்ளது.

எமது சங்கத்தின் ஊடாக நயினாதீவைச் சேர்ந்த 250 குடும்பங்கள் அன்றாடம் தங்கள் சீவியத்தை கொண்டு நடத்துவதற்கு ஏதுவாக அமைகின்றது. (படகு உரிமையாளர்கள், உதவியாளர்கள் உட்பட) எனவே தயது கூர்ந்து இது விடயமாக ஏற்ற ஒழு ங்கினை ஏற்படுத்திசாதகமான பதிலை வழங்கி எமது சேவை மேலும் சிறப்பாக நடைபெறவும்படகுச்சேவையினைமையமாக கொண்டு செயற்படும் படகு உரிமையாளர்களும் உதவியாளர்களும் அவர்கள் குடும்பங்களும் தங்கள் அன்றாட வாழ்க்கையை சிறப்பாக கொண்டு நடத்த ஆவன செய்யும் வண்ணம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கா. கோபால சிவம் கையொப்பமிட்டு வழங்கியுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

# வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்புரி செயற்பாடுகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு இராணுவ அலுவலர்கள்

## ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் நலன்புரி செயற்பாடுகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக பிரதேச செயலக. பிரிவு மட்டத்தில் இராணுவ அலுவலர்களை நியமிக்குமாறு தொடர்புடைய தரப்பினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.



நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்குறித்த ஆலோசனையைவழங்கினார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு காரணமாக அனர்த்தத்துக்கு உள்ளான மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்ற மீளாய்வுக்காக இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

தற்போது கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்களின் நலன்புரி செயற்பாடுகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அந்த மக்கள் பல அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதனால் அவை தொடர்பில் ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு உதவ வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அம்மக்களின் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிதி உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்யுமாறு ஜனாதிபதி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அத்துடன் அவர்களுக்கு உலருணவு வழங்குவதற்கு தான் தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உயர்தரமான உணவுப் பொருட்களை அந்த மக்களுக்கு வழங்க வேண்டிய தேவையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மேற்பார்வை குழுக்களை நியமித்து அந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்யுமாறும் ஆலோசனை வழங்கினார்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களை மீள்குடியேற்றுவதற்காக மாற்றுக் காணிகளை இனங்காணுதல் மற்றும் அக் காணிகளை விடுவித்தல் தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

காணிகளை இனங்காணும் செயற்பாடுகளை இம்மாதம் 15 ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டுமெனவும், அது தொடர்பில் ஏதாவது பிரச்சினை இருந்தால் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறும், காணிகளை இனங்கண்ட பின்னர் அக் காணிகளை பயனாளிகளுக்கு வழங்கு மாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (இ-7)

# சைட்டம் எதிர்ப்புப்பேரணி நேற்றும் தொடர்ந்தது

சைட்டம் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள பேரணி, நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.


அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் கண்டி பெரதெனிய - கலஹா சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி, நேற்று முன்தினம் மாவனெல்லையில் நிறைவடைந்தது.

தொடர்ந்து, மாவனெல்லையில் இருந்து நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட பேரணி, நெலும்தெனிய வரை சென்றடைந்தது.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக தொடர்ந்தும் இவ்வாறான ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டு வரும் நிலையில், குறித்த மருத்துவ கல்லூரி எக்காரணம் கொண்டும் மூடப்பட மாட்டாதென அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வரட்சி நாட்டின் நெற்செய்கையை பாரியளவில் பாதிக்கும்- பிரதமர்

வரட்சி நாட்டின் நெற் செய்கையை பாரியளவில் பாதிக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தற்பொழுது நாட்டில் நிலவி வரும் வரட்சியினால் நெற் செய்கை அரைவாசியினால் வீழ்ச்சியடையக் கூடும் என அவர் தெரிவித்தார்.



வரட்சியானது ஒட்டுமொத்த நாட்டுக்கும் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியுள்ள அவர் நெல் அறுவடையில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டால் அது அரிசி ஆலைகளை மூடுவதற்கு வழியமைக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோரிக்கைக்கு அமைய மல்வத்து ஓயா திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்தார். (இ-7)

## அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம்

# வடமேல் மாகாண சபையில் நேற்று கடும் வாக்குவாதம்

அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் தொடர்பில் வடமேல் மாகாண சபையில் நேற்று கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதற்கு ஆளும் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அமைச்சர்கள் தவிர ஏனைய ஆளும் தரப்பு உறுப்பினர்கள் கையில் கறுப்புப் பட்டிய ணிந்து சபைக்கு வருகை தந்திருந்தனர்.

இதற்கு எதிர்த்தரப்பினர் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். குறித்த ஒப்பந்தம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீண்டும் உடனடியாக நிர்மாணிக்க வேண்டும்

## - டாக்டர் ஜமுனானந்தா

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளையோரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை விரைவில் நிர்மாணிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாத தேவை என சிரேஷ்ட மருத்துவ அதிகாரி வைத்தியர் ஜமுனானந்தா தெரிவித்துள்ளார்.

"காசநோயை ஒழிப்பதற்கு எல்லோரும் ஒன்று படுவோம்" எனும் தொனிப்பொருளில் உலக காசநோய தினம் பண்ணையில் அமைந்துள்ள வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணத்தில் காச நோய் வைத்தியசாலை தற்போது எப்பகுதியிலும் இல்லை. இங்குள்ள காச நோயாளர்கள் இதுவரை கோப்பாயில் அமைந்துள்ள விடுதி ஒன்றிலேயே தான் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளித்து வருகிறார்கள். ஆனால அங்கு தொடர்ச்சியாக அமைந்திருப்பது தவறு.

காங்கேசன்துறையில் அமைந்திருந்த காசநோய் வைத்தியசாலை மீளவும் நிர்மாணிக்கப்பட வேண்டும். காச நோயாளர்களை பாராமரிப்பதற்கு அதுவே சிறந்த இடமாகும். அத்துடன் வெளி இடங்களில் இருநதும் மேலதிகமான நோயாளர்களை இங்கு வைத்து பராமரிக்க முடியும்.

மேலும் இறுதி யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான மக்கள் நச்சுப் புகையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இளம் வயது, அதாவது 30 வயதிலேயே இருதய நோய், குருதி அமுக்கம் போன்ற நோய்கள் திடீரென ஏற்படுகிறது. பல சுவாச நோய்கள் அதிகரித்துள்ளது. எனவே மிக விரைவில் காசநோய் வைத்திய சாலையை காங்கேசன்துறையில் அமைப்பது மிக மிக இன்றியமையாத தேவையாகவுள்ளது.

காங்கேசன்துறை மயிலிட்டி பகுதியில் அமைந்திருந்த வைத்தியசாலை தற்போது தரைமட்டமாக உள்ளது. முன்னர் இருந்த வைத்தியசாலையில் 110 கட்டில்கள் இருந்தன. 55 உத்தியோகத்தர்கள் பணி புரிந்தார்கள். அவர்களும் பணியில் மீள நியமிக்கப்பட வேண்டும் எனில் குறித்த வைத்தியசாலையை மீள நிர்மாணிக்க வேண்டும். அதை மீள நிர்மாணிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க இந்திய அரசு தயாராக இருப்பதாக யாழ். இந்திய துணைத்தூதுவா தெரிவித்துள்ளார். எனவே குறித்த வைத்தியசாலையை விரைவில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே இந்த விடயத்தில் சுகாதார அமைச்சரும் உரிய அதிகாரிகளும் கவனத்தில் எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (மு-9)

# எனக்கு பிடித்தவர் கலீஸ்தான் என்கிறார் ஹர்திக் பாண்டியா






மூன்று வகை கிரிக்கெட்டிலும் ஜாம்பவானாக திகழ்ந்த தென்னாபிரிக்கா அணியின் சகலதுறை வீரர் கலீஸ்தான் எனக்கு எப்போதும் பிடித்தவர் என்கிறார் ஹர்திக் பாண்டியா.

இந்திய கிரிக்கெட் அணியின் முனணி சகலதுறை வீரராக உருவெடுத்து வருபவர் ஹர்திக் பாண்டியா. காலியில் நடைபெற்ற இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் ஹர்திக் பாண்டியா அறிமுகமானார். முதல் இன்னிங்சில் விரைவாக அரைச்சதம் அடித்து அசத்தினார்.

இந்த போட்டிக்குப்பின் இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி நிருபர்களிடம் கூறுகையில், பென்ஸ்ரோக்ஸ் சகலதுறை வீரராக இங்கிலாந்து அணிக்கு என்ன செய்து கொண்டிக்கிறாரோ, அதை ஹர்திக பாண்டியா இந்திய அணிக்காக செய்வார் என்று புகழாரம் சூட்டினார்.

ஆனால் தனக்கு எப்போதும் பிடித்தவர் கலீஸ்தான் என ஹர்திக் பாண்டியா கூறுகிறார்.

இதுகுறித்து ஹர்திக் பாண்டியா கூறுகையில், எனக்கு எப்போதும் பிடித்த மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர் தென்னாபிரிக்க அணியின் கலீஸ். அனைத்து வகை கிரிக்கெட்டிலும் அபாரமான சாதனைகள் படைத்துள்ளார். எந்தவொரு ஆடுகளத்திலும் 3-வது இடத்தில் இறங்கி அதிக ஓட்டங்களை குவித்துள்ளார் என்றார்.

# நியூசிலாந்து கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மிண்டன் பிரனாய், காஷ்யப் இரண்டாவது சுற்றுக்கு தகுதி

நியூசிலாந்தில் நடந்துவரும் கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மிண்டன் போட்டியின் இரண்டாம் சுற்றுக்கு இந்திய வீரர்கள் பிரனாய், காஷ்யப், சவுரப் வர்மா, சிரில் வர்மா மற்றும் பிரதுல் ஜோஷி ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

நியூசிலாந்து கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மிண்டன் போட்டிகள் அந்நாட்டின் ஆக்லாந்து நகரில் நேற்று (செவ்வாய்க்கிழமை) தொடங்கின. இப்போட்டிகள் இம்மாதம் 6ஆம் திகதி வரை நடைபெறுகின்றன. நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய வீரர்கள் பிரனாய், காஷ்யப், அஜய்ஜெயராம், சவுரப்வர்மா, சிரில் வர்மா மற்றும் பிரதுல் ஜோஷி ஆகியோர் விளையாடினர்.

தரவரிசையில் நான்காம் நிலையில் இருக்கும் இந்திய வீரர் எச்.எஸ். பிரனாய், இந்தோனேசியாவின் ஷேசர் ஹைறன் ருஸ்டாவிடோவை எதிர்கொண்டார். இப்போட்டியில் 21-14, 21-16 என்ற புள்ளிக் கணக்கில் பிரனாய் வென்றார்.

மற்றொரு முதல் சுற்று போட்டியில் தரவரிசையில் ஐந்தாம் இடத்தில் இருக்கும் காஷ்யப், இந்தோனேசியாவின் ஹயோம் ரும்பாகாவை 21-14, 21-10 என்ற புள்ளிக் கணக்கில் எளிதாக வென்றார்.

மற்றொரு இந்திய வீரர் அஜய் ஜெயராம் 19-21, 13-21 என்ற புள்ளிக் கணக்கில் சீனாவின் சியா ஹங் லூவிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

இதுதவிர இந்தியாவின் சவுரப் வர்மா, சிரில் வர்மா மற்றும் பிரதுல் ஜோஷி ஆகியோரும் முதல் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.


## சேல்ஸ்மன் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது பிடவை நிறுவனத்துக்கு O/L, A/L படித்த ஆண் / பெண் ஊழியர்கள் தேவை. நேரில் வரவும்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்,
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். (005)


# மரண அறிவித்தல்



(C-9231)

## கணபதிப்பிள்ளை சிதம்பரலிங்கம்

### (கிளி அண்ணா)

(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்து சபை நடத்துநர்)

நாகலிங்க முதலியார் வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிதம்பரலிங்கம் (கிளி அண்ணா) நேற்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூரணலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சாந்தி, சுந்தர், பாக்கியலிங்கம் (பாலன்), வசந்தி, சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணகுமார், சசி, மோகனவதனி, ராஜசேகரன், வசந்தநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, சீவரத்தினம், தங்கரத்தினம், யோகேஸ்வரி, ஈஸ்வரி ஆகியோரின் சகோதரரும் மற்றும் சுந்தரலிங்கம், தங்கவேலாயுதம், சொர்ணலிங்கம் ஆகியோரின் சகோதரரும் மற்றும் அபிலாஷா, உதயராஜன், ரவிக்குமார், தேவகி, சந்துரு, சுமித்திரா, சுஜித்திரா, பிரவீன், பிரசூன், தீபன், கரன், எஸ்தர், டானியல், மோதகாய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜோபிகா, கௌசிகா, திவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு முற்பகல் 9.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
நாகலிங்க முதலியார் வீதி,
பருத்தித்துறை.
077 704 6623
021 226 0090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானம் வெட்கித் தலைகுனிந்த வல்வைப் படுகொலை

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி இந்தியாவின் அமிர்தசரஸ் நகரிலே ஜெனரல் ரயர் தலைமையில் ஆங்கிலேய இராணுவம் நடத்திய மனிதப் படுகொலையை விட மிகப் பயங்கரமான படுகொலையானது 1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் நடத்தியிருக்கிறது.

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய இப்படுகொலையை வியட்நாமில் இடம்பெற்ற மயிலாய படுகொலைக்குச் சமமாக ஒப்பிட்டிருக்கிறார். ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜார்ச் பெர்னாண்டஸ் வியட்நாமிலே மயிலாய என்ற இடத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய காட்டு மிராண்டித்தனமான படுகொலையை உலகமே கண்டித்தது. ஆனால் வல்வெட்டித்துறையிலே இந்திய அரசு நடத்திய இப்படுகொலைச் சம்பவத்தை திட்டமிட்டு மறைத்தது பெரும்பாலான இந்திய பத்திரிகைகளும் இப்படுகொலைச் சம்பவத்தை மறைப்பதில் இந்திய அரசுக்கு உறுதுணையாக நின்றன.

ஆனால் இப்படுகொலைச் சம்பவம் நிகழ்ந்த 13 நாட்களுக்குப் பின் வல்வெட்டித்துறைக்குச் சென்ற லண்டன் பைனான்ஸியஸ் டைம்ஸ் பத்திரிகையில் டில்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவம் பற்றிய முழு விபரங்களையும் முதன்முதலாக தமது பத்திரிகையில் வெளியிட்டதைக் கண்டு உலகமே அதிர்ச்சியடைந்தது.

1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி காலை வல்வெட்டித்துறைச் சந்தைச் சதுக்கத்தில் எதிர்பாராத விதமாக விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஆறு இந்திய வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து வல்வெட்டித்துறையைச் சுற்றி இருந்த மூன்று இராணுவ முகாம்களில் இருந்த ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வல்வெட்டித்துறையை சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். மூன்று நாட்களுக்கு அச்சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை கதவுகளை உடைத்து உட்புகுந்த இராணுவம் பதறப்பதற சுட்டுக்கொன்றது. இந்த வெறியாட்டத்தில் 63 பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி வழங்க முன்வந்த பிரான்ஸ் மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இராணுவம் அனுமதிக்கவில்லை.

மொத்தம் 123 வீடுகள் அடியோடு நாசமாக்கப்பட்டன. 45 கடைகள் எரிக்கப்பட்டன. 12 மீன்பிடிப்படகுகள் நாசம் செய்யப்பட்டன. 176 மீன்பிடி வலைகள் எரியூட்டப்பட்டன. வீடுகளில் இருந்த பணம், நகை மின் உபகரணங்கள் இந்திய இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. ஏராளமான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.



வல்வைப் படுகொலையின் 28 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் இந்தியப் பிரிகேடியர் சங்கர் பிரசாத் மக்கள் குழு உறுப்பினர்களை அழைத்து பின்வருமாறு கொக்கரித்தார்.

இந்திய இராணுவம் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் உங்கள் ஊரை அடியோடு எரிப்பேன். நூற்றுக்கணக்கில் மக்களைச் சுட்டுத்தள்ளுவேன். இராமாயணத்தில் இலங்கை எரிக்கப்பட்டது போல மீண்டும் எரியும். எங்களை யாரும் எதுவும் செய்யமுடியாது. நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்.

அவர் மிரட்டியதைப் போலவே சில நாட்களில் அழகிய வல்வெட்டித்துறை சுடுகாடானது. வல்வெட்டித்துறையால் மட்டுமல்லாது அங்கிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஊரணி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் இராணுவத்தின் வெறியாட்டம் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் மூன்று நாட்கள் நாவேட்டையில் நடத்திய இந்திய இராணுவம் தனது வெறியாட்டத்தை திட்டமிட்டு மறைத்தது. ஜனதா தளப் பொதுச்செயலாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இப்பிரச்சினையை அம்பலப்படுத்துவதில் முன்னின்றார். இப்படுகொலை பற்றிய ஆதாரங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை தொகுத்து ஆங்கிலத்திலும் தமிழிலும் ஹிந்தியிலும் நூலாக வெளியிட்டு இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கிலும் அம்பலப்படுத்தினார். இதனால் ராஜீவ்காந்தி அரசின் முகமூடி கிழிந்தது.

அமைதிக்காக வந்த அமைதிப்படை அரங்கேற்றிய வல்வைப்படுகொலையின் பின்னர் இலங்கை அரசு நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலை, நாகர் கோவில் பாடசாலைப் படுகொலை, யாழ். பொது மருத்துவமனைப் படுகொலை, மூதூர் தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் படுகொலை மற்றும் வீதியோரப் படுகொ லைகள், மனிதவுரிமை மீறல் கள், கடத்தல்கள் போன்றவற் றால் ஈழத்தமிழர்கள் நொந்து போயிருந்தனர். அவற்றி லிருந்து தப்புவதற்காக அகதி என்ற அந்தஸ்தைச் சுமந்து பாரத மண்ணிற்கே படையெடுத்தார்கள்.

தஞ்சமென வந்தவர்களை ஆதரிக்கும் இந்திய தேசம் ஒருமுறை- ஒரே ஒருமுறை தீர்க்கமான முடி வுகளை எடுத்து ஈழத்தமிழர் நலத்தினையும் உறுதிப்படுத்த முடியாமற் போய்விட்டது.

தேவாலயங்கள், வைத்திய சாலைகள், பாட சாலைகள், பழம் பெருமை பேசும் பண்பாட்டுத் தலங்கள் எவற்றையும் விட்டு வைக்காது அவ ற்றை நிரந்தர அழிவுச் சின்னங்களாகப் பதிவு செய்து வந்த இலங்கையரசுகள்தான் எம்மை மாறிமாறி ஆட்சி செய்துவந்தன. ஈழத்தமிழர் பிரச்சினையில் இப்போது பாரத மாதா பாராமுகமாக கண்ணை மூடிக் கொண்டிருக்க எந்தவிதமான நியாயமும் இல்லை. தார்மீகப் பொறுப்பை ஏற்று வழிநடத்தி ஈழத்தமிழர் பால் இந்திரா அம்மையார் காட்டிய அக்கறையை அந்த ஒப்பற்ற சீரிய பணியை இனியும் காலம்தாழ்த்தாது எமது அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளியிட்டு ஈழத்தமிழர்கள் தமக்குரிய- அவர்களிடம் இருந்து பிரிக்க இயலாத- உரிமைகளுடன் வாழ்வதற்குப் பாரத தேசத்தின் கண்கள் விரைவில் திறந்திட வேண்டி நிற்கின்றோம்.

**வல்வை ஜெயம்**

## இராசி பலன்

02.08.2017
(ஆடி 17, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
தசமி பிற்பகல் 4.10 மணிவரை
அனுசம் மாலை 5.45 மணிவ்ரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி | | ராகு<br>செவ்<br>சூரி |
| | | | புத |
| | சந்<br>சனி | | குரு |

**மீனம்** இழுபறியாக இருந்த காரியமொன்று இனிதே முடியும், தேகநலன் சீராகும், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், பயணங்கள் கைகூடும்.

**மேடம்** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைச் சுமை கூடும் நாள், யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**இடபம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** அன்பு நண்பர்கள் ஆதரவுதர முன்வருவர், என்றோ நடக்கலாம் என நினைத்த காரியம் இன்று நடைபெறலாம், பயணங்கள் எண்ணியபடி கைகூடும்.

**கடகம்** மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்** திடீர் பணவரவால் சந்தோசம் அதிகரிக்கும், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** ஆசைகள் பூர்த்தியாகும் நாள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், சேமிப்பு உயர்வடையும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், எடுத்த செயலை முடிக்க உறவினர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு உதவி



கரையோர பிரதேச பாடசாலைகளிலுள்ள வறிய குடும்ப மாணவர்களுக்கான இலவச காலணிகளுக்கான வவுச் சர் வழங்கும் நிகழ்வு அண்மையில் புனித ஆசீர்வாதப்பர் இளையோர் ஒன்றியத்தின் ஏற் பாட்டில் யாழ். சென் றெக்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆசி ரியர், மாணவர்கள் எனப் பலரும் கல ந்து கொண்டனர். (இ-10-108)

## மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா

யாழ். புனித மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14 ஆம் திகதி திங்கட்கிழமை திருநாள் திருப்பலியும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் கூட்டுத்திருப்பலியும் மாலை 5.30 மணிக்கு ஓய்வு நிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைதலைமையில் 2ஆம் கூட்டுத் திருப்பலியும் இடம் பெறவுள்ளது. (இ-10-107)


# வரலக்ஷ்மி விரதம்

யாழ். வண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வரலக்ஷ்மி விரதம் நாளை மறுதினம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறும். அபிஷேகம் ,மூலமூர்த்தி பூஜை என்பன இடம் பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வந்து அதனைத் தொடர்ந்து வரலக்ஷ்மி காப்பு வழங்கப்படும். (இ-3)

# சமூர்த்திப் பயனாளிகள் மேன்முறையீடு செய்யலாம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் கட்டுடை பிரதேச சமூர்த்திப் பயனாளிகள் தெரிவில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சமூர்த்திப் பயனாளிகளின் பெயர் விபரங்கள் கட்டுடை சமூர்த்தி அலுவலகத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இப் பெயர்ப்பட்டியலில் பெயர் விபரம் வரத் தவறிய சமூர்த்திப் பயனாளிகள் இருவார காலத்திற்குள் கட்டுடை சமூர்த்தி அலுவலகத்தில் மேல் முறையீடு செய்யுமாறு சமூர்த்தி உத்தியோகத்தர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-102)





சுண்டுக்குளி பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழாவின் திருநாள் திருப்பலி அண்மையில் இடம் பெற்ற போது....

(படங்கள் - ஈச்சமோட்டை செய்தியாளர்)

# கரவெட்டி மத்தியஸ்த சபை தற்காலிகமாக இடமாற்றம்

(கரணவாய்)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இயங்கும் மத்தியஸ்தசபையானது இக் கல்லூரி க.பொ.த . உயர்தரப் பரீட்சை நிலையமாகவுள்ளதால் கரவெட்டி மத்தியஸ்த சபை தற்காலிகமாக திரு இருதயக் கல்லூரியில் 06, 13 ,20, 27-08-2017 மற்றும் 03-09-2017 ஆகிய திகதிகளில் மட்டும் நடை பெறும் என தவிசாளர் சி. நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (இ-60)

# சேவையை முன்னிலைப்படுத்தியே ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும்

## வடக்கு ஆளுநர் கூரே வலியுறுத்து

ஆசிரியர்கள் பணத்தை மட்டும் மையப்படுத்தி தமது கடமைகளை செய்யக் கூடாது. மாறாக சேவையை முன்னிலைப்படுத்தி செயலாற்ற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் பயிற்சினை நிறைவு செய்து ஆசிரியர்களாக நியமனம் பெற்ற மலையக மாணவ மாணவிகளுக்கான பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆசிரியர் கலாசாலையில் நீங்கள் அனைவரும் உங்கள் பயிற்சிகளை முடித்துவிட்டு உங்கள் பிரதேசங்களில் ஆசிரியர்களாக சேவையாற்றவுள்ளீர்கள். ஆசிரியர்கள் என்பவர்கள் சேவை செய்பவர்களே அன்றி அவர்கள் தொழிலாளிகள் அல்ல. பணம், பொருளை சேகரித்துக் கொள்வதற்காக ஆசிரியர் சேவையை நாம் பயன்படுத்தக்கூடாது. பணத்தை மையப்படுத்தி நாங்கள் பணி ஆற்றுவோமானால் எங்களுக்கும் ஏனைய தொழில் செய்பவர்களுக்கும் வேறுபாடு இல்லாமல் போய் விடும். பணம் எல்லோருக்கும் அவசியமானதொன்று தான். ஆனால் அதற்காக ஆசிரியர் சேவையினை தெரிவு செய்தல் ஆகாது.

நல்லதொரு ஆசிரியராக பணியாற்ற வேண்டுமானால் சான்றிதழ்கள் மட்டும் போதாது. திறமை, புலமை, அறிவு இருக்க வேண்டும் அதுவும் போதாது. இவற்றுக்கு மேலாக சிநேகபூர்வமான அன்பு இருக்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் நீங்கள் பணி ஆற்றும் போது அன்பு, இரக்கம் உள்ளிட்ட நற்பண்புகள் இருக்க வேண்டும். அன்பும் அறிவும் கலந்து இருந்தால் மட்டுமே உங்களால் நல்ல சேவையினை வழங்க முடியும்.

கல், மண், இரும்பு போன்றவற்றுடன் நாம் வேலை செய்வது மிகவும் கடினமான விடயம் அல்ல. ஆனால் ஆறு அறிவு படைத்த மனிதனுடன் வேலை செய்வது கடினமான விடயம். அதற்கு அன்பும், அறிவும் அவசியமானது.

எனது அம்மாவும் அப்பாவும் தேயிலை தோட்டத்திலே வேலைசெய்தவர்கள் அந்த காலப்பகுதியிலே நான் தமிழ் பேச கற்றுக்கொண்டேன். இன்று வட மாகாணத்தில் ஆளுநராக பணி புரிவதற்கு அது மிகவும் எனக்கு உதவியாக இருக்கின்றது. தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் கஷ்டங்களை நன்கு அனுபவித்தவன் நான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)




# கட்டாக்காலி நாய்களால் அவதி

இளவாலை பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்திருப்பதால் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகுவதாகத் தெரிவித்துள்ளனர். இவ் வீதிகளால் பயணித்த பலர் நாய்க்கடிக்குள்ளாகியிருப்பதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடன் நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-104)

# மரணசகாய நிதி வழங்கல்





யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினால் மரண சகாய நிதி உதவித் திட்டத்தின் அடிப்படையில் அண்மையில் மரணமடைந்த சங்க அங்கத்தவர்கள் மூவரின் குடும்பத் தலைவியர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. (இ-3)

## பாக்கியம் முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் பாக்கியம் பாலர் பாடசாலை மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் இன்று புதன்கிழமை வண். வட மேற்கு ஆறுகால்மடம் மைலுவீதியில் இடம் பெறவுள்ளது. முன்பள்ளியின் தலைமை ஆசிரியர் எஸ்.கே. லதா தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் சிறுவர்கள் தங்கள் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தவுள்ளனர். இந்த விளையாட்டு நிகழ்விற்கு ஆர்வமுள்ள அனைவரையும் வந்து பார்த்து இரசித்து சிறுவர்களை ஊக்கப்படுத்துமாறு பாக்கியம் முன்பள்ளிசமூகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-9)

## வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

கீரிமலை பிரதேசத்தை அண்டிய வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் இரவு வேளைகளில் ஒளிர்வதில்லையெனவும் இதனால் இவ் வீதிகளினூடாக இரவு வேளைகளில் பயணிப்போர் பெரும் அசௌ கரியங்களுக்குள்ளாகுவதாகபிரதேசமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-10-104)







இலங்கை வங்கியின் 78 வது ஆண்டு நிறைவு விழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி கிளையில் கிளை முகாமையாளர் ஜி.பரதன் தலைமையில் நடை பெற்றது. இதன் போது இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் எஸ். சந்தனு மங்கல விளக்கேற்றுவதனையும் 78 ஆவது ஆண்டு விழாவினை கேக் வெட்டி கொண்டாடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தள விமான நிலையத்தில் மாற்றம்




மத்தள சர்வதேச விமான நிலையத்தின் முகாமைத்துவத்தை வேறு ஒரு நிறுவனத்திற்கு வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலுத்கம பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே பிரதமர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மத்தள சர்வதேச விமான நிலையத்தின் முகாமைத்துவத்தை வேறு ஒரு நிறுவனத்திற்கு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. விரைவில் இது தொடர்பான இறுதி முடிவுகள் வெளியிடப்படும்.

விமான நிலையத்தில் இருந்து பெறப்படும் இலாபத்தை அதிகரிப்பதுடன் பல அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் இதனைச் செயற்படுத்துவதற்கு நிர்வாக மாற்றம் உதவிபுரியும்" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வெளிவிவகார அமைச்சரை அடுத்தடுத்து வந்து சந்தித்த அமெரிக்க, ரஷ்ய தூதர்கள்





அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் நேற்று முன்தினம் ஒரே நாளில் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை திடீரெனச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் அலெக்சான்டர் கர்சாவா நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது இலங்கை-ரஷ்யா இடையிலான நட்புறவு வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இலங்கையின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவும் என்றும் ரஷ்ய தூதுவர் அலெக்சான்டர் கர்சாவா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் பிற்பகல் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஆதரவு வழங்க அமெரிக்கா எப்போதும் கடமைப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்திலும் இலங்கையின் அபிவிருத்திக்கான பலமான ஆதரவை அமெரிக்கா வழங்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை ரஷ்ய மற்றும் அமெரிக்க தூதுவர்கள் ஒரே நாளில் அடுத்தடுத்து சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக பார்க்கப்படுகிறது. (இ-7)

# இராணுவ முகாமை அகற்ற அஸ்கிரிய பீடம் கடும் எதிர்ப்பு



கண்டி நகரத்திலுள்ள இராணுவத்தின் சிங்க ரெஜிமென்டின் முகாமை அகற்றுவதற்கு அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரும், பௌத்த பிக்குகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரை நேற்று முன்தினம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சந்தித்துப் பேசிய போதே, கண்டி நகரிலுள்ள இராணுவ முகாமை அகற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யட்டிநுவர வீதியிலுள்ள சிங்க ரெஜிமென்ட் முகாமை அகற்றுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவுக்கு மகாநாயக்கரும், காரக்க சங்க சபாவின் உறுப்பினர்களான பௌத்த பிக்குகளும் சம்பிக்க ரணவக்கவிடம் எதிர்ப்பை வெளியிட்டனர்.

புனித நகரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த இராணுவ முகாம் அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமது அமைச்சு இந்த இராணுவ முகாமை அகற்றக் கோரவில்லை என்றும், இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள 20 பேர்ச் காணிகளை ஒப்படைக்குமாறே இராணுவத் தலைமையகத்திடம் கோரியதாகவும் அதற்கு இராணுவத் தலைமையகத்தினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் சம்பிக்க ரணவக்க தெளிவுபடுத்தியுள்ளார். (இ-7)

## கலைமுதற் தேர்வு (வெளிவாரி) அரையாண்டு அடிப்படை முதலாம் அரையாண்டு நேரடிக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

முதலாம் அரையாண்டு மாணவர்களுக்கான நேரடிக் கலந்துரையாடல் எதிர்வரும் 05 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட விரிவுரை மண்டபத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி கலந்துரையாடலுக்கான நேர அட்டவணையினை இணையத்தளத்திலும் (www.codl.jfn.ac.lk) மற்றும் முகப் புத்தகத்திலும் (w.w.w.facebook.com/uoj.codl) பார்வையிட்டு மேற்படி கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களை பங்குபற்றிக் கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ)

# இலங்கை அணிசேராக் கொள்கையை அனுசரிக்க வேண்டும்-சம்பிக்க அட்வைஸ்



(கொழும்பு)

இலங்கையின் புவியியல் அமைவிடத்தைக் கருத்திற் கொண்டு சர்வதேச கொடுக்கல்- வாங்கல்களில் அணிசேராக் கொள்கையை அனுசரிப்பது அவசியமென மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை, சீனாவுடன் கொண்டுள்ள உறவுகள் காரணமாக இந்துமா சமுத்திரத்தின் ஏனைய நாடுகளுடனான உறவுகளைத் தொடர்வதில் சிக்கல்கள் எழலாம். இதன் காரணமாக பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியமாகிறதென அமைச்சர் தெரிவித்தார்.

அரசியல் யாப்பு தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சி வகுத்துள்ள யோசனைகளை மல்வத்து, அஸ்கிரிய பீடங்களின் மஹாநாயக்கர்கள் மத்தியில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விபரித்தார்.

அதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்கள் மத்தியில் இவ்வாறு கருத்து வெளியிட்டார். (இ-7)

# துப்பாக்கியை காட்டி மிரட்டி வங்கியில் பணம் கொள்ளை

புத்தல – ஹொரபொக்க - பெல்வத்தை பகுதியில் நேற்றுக் காலை கூட்டுறவு கிராமிய வங்கியை உடைத்து பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

துப்பாக்கி சகிதம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வங்கி ஊழியர்களை மிரட்டி இவ்வாறு கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இதன்போது சுமார் இரண்டு இலட்சம் ரூபா வரையான பணம், தங்க நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை புத்தல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



மக்கள் வங்கியின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்திய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வொன்று மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 156 குருதிக் கொடையாளர்கள் குருதிக் கொடையை வழங்கியிருந்தார்கள். மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு வயது சிறுமி வன்புணர்வு குற்றவாளிக்கு 27 வருட சிறை

## 5 இலட்சம் ரூபா நட்ட ஈடு 10,000 ரூபா தண்டப்பணம்

(குருமன்காடு)

வவுனியா போகஸ்வெள பிரதேசத்தை சேர்ந்த 7 வயது சிறுமியை கடத்தி வன்புணர்வுக்குட்படுத்திய மதவாச்சி மாமா என அழைக்கப்படும் முத்துபண்டாகே செனரத் அனுர சாந்த சரத்குமார என்ற நபருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று 27 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வவுனியா போகஸ்வெளவில் 7 வயது சிறுமியை கடத்தி வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டுக்கு முத்துபண்டாகே செனரத் அனுர சாந்த சரத்குமார என்பவரை வவுனியா பொலிஸார் கைது செய்து வவுனியா நீதவான் நீதிமன்றுக்கு முற்படுத்தியதன் அடிப்படையில் ஆரம்ப வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

அதன் பின்னர் 2017.03.16 ஆம் திகதி அன்று 7 வயது சிறுமியை கடத்தியமை மற்றும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் புரிந்தமை என்ற 2 குற்றச்சாட்டுக்காக இந்த எதிரிக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன் பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்ததுடன் இச்சம்பவத்தினூடாக பாதிக்கப்பட்ட சிறுமியும் சிறுமியின் தாயாரும் சட்ட வைத்திய அதிகாரியும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருந்தனர். அதன் பின்னர் எதிரி சாட்சியமளித்திருந்தார்.

இவ் வழக்கு விசாரணை இடம்பெற்று தீர்ப்பு நியமிக்கப்பட்டிருந்தது. நேற்றைய தினம் இவ்வழக்கு அழைக்கப்பட்டு எதிரிக்கு எதிரான இரண்டு குற்றச்சாட்டுக்களும் வழக்கு தொடுநர் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த எதிரியை குற்றவாளியாக காண்பதாக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தெரிவித்தார். அதனையடுத்து தண்டனை தீர்ப்பு வழங்கும் போது ஓர் விசேட காரணத்தினை சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியினுடைய தாயார் சாட்சியமளிக்கும் போது தெரிவித்ததாவது.

"நான் மிகவும் கஷ்ட நிலையிலேயே எனது பிள்ளைகளை வளர்த்து வருகின்றேன். சமூகத்திலே சிறு பிள்ளைகளுக்கு எனது மகளுக்கு ஏற்பட்டது போன்று பல்வேறு அநியாயங்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறு அநியாயங்கள் இடம்பெறாமல் நீதிபதி ஐயா தடுக்க வேண்டும்" என கண்ணீர் மல்க மன்றில் தெரிவித்தார்.

இதனை மன்றில் சுட்டிக்காட்டிய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் இந்த எதிரிக்கு எதிரான முதலாவது குற்றச்சாட்டான 16 வயதிலும் குறைந்த பெண் பிள்ளையை சட்ட ரீதியான பாதுகாவலரிடமிருந்து கடத்திய குற்றச்சாட்டுக்காக அதிகபட்ச தண்டனையாக 7 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

இந்த எதிரிக்கு எதிரான இரண்டாவது குற்றச் சாட்டான 7 வயது சிறுமியை பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்கு அதிக பட்ச தண்டனையாக 20 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபா நட்ட ஈட்டினை செலுத்துமாறும் நட்டஈட்டை செலுத்த தவறும் பட்சத்தில் 2 வருட கடூழிய சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று பணித்ததுடன் தண்டப்பணமாக பத்தாயிரம் ரூபா விதித்தார்.

வழக்கு தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கினை நெறிப்படுத்தியிருந்தார்.

(8-250)

# சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் கிளி. மகா வித்தியாலய மாணவன்



அகில இலங்கை தேசிய ரீதியில் கடந்த 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற 6 ஆம் ஆண்டிற்கான கணித ஒலிம்பியாட் போட்டியில் கிளி. மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் திருக்குமரன் 3 ஆம் இடத்தைப் பெற்று சர்வதேச ரீதியாக சிங்கப்பூரில் நடைபெறவுள்ள போட்டியில் பங்குபெற்றுள்ளார்.

இலங்கையில் இருந்து 6 மாணவர்கள் தெரிவான சிங்கப்பூரில் நடைபெறவுள்ள போட்டியில் இவர் ஒருவர் மட்டுமே தமிழ் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (8-277)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த அதிசயம்



வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் கிழக்கு மூலையில் காணப்படும் அரசமரத்தில் அம்மனின் உருவம் தோன்றியுள்ளது

பல்வேறு அதிசயங்கள் நிகழ்ந்துவரும் இந்த ஆலயத்தில் கடந்த வருடம் வேப்பமரத்திலிருந்து பால்வடிந்தது. இந்நிலையில் நேற்றைய தினம் அரசமரத்தில் அம்மனின் உருவம் தென்பட்டுள்ளதால் பக்தர்கள் ஆலயத்துக்கு திரண்டு வந்து இவ் அம்மனின் உருவத்தை பார்வையிட்டு வருகின்றனர்.

வரலாற்று சிறப்பு மிக்க இவ் ஆலயத்தில் ஆரம்ப காலம் தொட்டு பல்வேறு அதிசயங்கள் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (3-8-281)

# 30 வருடங்களாக முடங்கியிருந்த வீதி மக்கள் பாவனைக்காக திறந்து வைப்பு

(வவுனியா)

வவுனியா - தெற்கிலுப்பைக்குளம் மற்றும் மாமடு சந்தியை இணைக்கும் ஒளவையார் வீதி புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதற்காக வவுனியா பிரதேச செயலகம் 4 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதுடன், வவுனியா நகரசபையினரின் அனுமதியுடனும், மக்களின் பங்களிப்புடனும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த முப்பது வருடங்களாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலையில் பாடசாலை மாணவர்கள் சுமார் இரண்டு கிலோ மீற்றர் சுற்றிச் செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டிருந்தது.

மேலும், இறந்தவர்களை மயானத்திற்கு கொண்டு செல்வதிலும், தெற்கிலுப்பைக்குளம் மற்றும் கோவில் குளம் கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (15-3-8-250)




# அரச உத்தியோகத்தர் மீது இணையத்தளம் அவதூறு

(வவுனியா)

வவுனியா பொலிஸ் நிலையத்தில் அரச உத்தியோகத்தர் ஒருவர் தன் மீது இணையத்தளம் ஒன்று அவதூறு பரப்பியுள்ளதாக தெரிவித்து முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா அரசாங்க அதிபரின்கட்டுப்பாட்டிலுள்ள சுற்றுலா விடுதி காப்பாளராக பணியாற்றும் மகாரம்பைக்குளம் பகுதியைச்சேர்ந்த வைரவநாதன் திலீபன் என்பவரே குறிப்பிட்ட இணையத்தளம் தன் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாக தெரிவித்து பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளார்.

குறிப்பிட்ட உத்தியோகத்தர் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக ஏற்பட்ட பகைமை காரணமாக தன்னை பழி வாங்குவதற்காக குறிப்பிட்ட சிலர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை குறிப்பிட்ட இணையத்தளத்திற்கு கொடுத்துள்ளதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

குறிப்பிட்ட நபர்களை பொலிஸாரிடம் அடையாளம் காட்டியுள்ளதாகவும் அவர்கள் வெகு விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (3-8-250)

# பரீட்சைக் காலங்களை மையப்படுத்தி மன்னாரில் ஏற்படுத்தப்படும் மின்தடை

## மன்னார் மாவட்ட மக்கள் மன்றத்தினரால் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவிற்கு கடிதம்

மன்னார் மாவட்டத்தில் பரீட்சை காலங்களை மையப்படுத்தி குறிப்பாக க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த), புலமைப்பரிசில் பரீட்சைக் காலங்களையும் மையப்படுத்தி கடந்த சில ஆண்டுகளாக அசாதாரண மின்வெட்டும் மின்தடையும் சீரற்ற மின் விநியோகமும் நடைபெற்று வருகின்றது.

இது தொடர்பாக மாவட்ட உயர் அதிகாரிகள் மட்டத்தில் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் நிலைமைகள் இன்றுவரை சீரடைவதாகத் தெரியவில்லை. இவ்வருடமும் ஓகஸ்ட் மாதம் க.பொ.த. (உ/த) பரீட்சை நடைபெறவுள்ள நிலையில் தற்போது மின்தடையும் சீரற்ற மின்விநியோக நடைமுறையும் மீண்டும் ஆரம்பித்து உள்ளது.

அத்தோடு திடீர் திடீர் என ஏற்படும் மின்வெட்டு மின் சீரின்மையாக்கல் காரணமாக பெறுமதியான பல இலத்திரனியல் சாதனங்கள் நாளாந்தம் பழுதடைந்து செல்வது மக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளதோடு கடந்த காலங்களில் இரவு நேர மின் வெட்டினை பயன்படுத்தி பல திட்டமிடப்பட்ட திருட்டுச் சம்பவங்கள், கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் சமூக விரோத செயல்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன என்பதனையும் தங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

மன்னார் மாவட்ட மாணவர்களின் கல்வியையும் மின்சாரத்தை நம்பி பொது மக்களினால் மேற்கொள் ளப்படும் தொழில்களையும் சமூகத்தையும் பெரும் பாதிப் புக்கு உள்ளாக்கிவரும் இம் மின்தடையை பொறுப்பு வாய்ந்த எவரும் கண்டு கொள்ளாமையானது எம் மக்கள் மீது திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வரும் சதி நடவடிக்கையா? என எம்மால் கேள்வி எழுப்பப்படுகின்றது.

தற்பொழுது பரீட்சைக் காலம் நெருங்கியுள்ளதால் எமது மாவட்ட மாணவர்களின் கல்வியினை கருத்தில் கொண்டு பரீட்சை முடியும் வரையாவது எவ்வித மின் தடையும் ஏற்படாமல் சீரான மின் விநியோகத்தினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்வது எமது மக்களுக்கு செய்யும் மிகப் பெரிய உதவியாக கருதுகின்றோம்.

எனவே இவ்விடயம் தாங்கள் உடனடியாக தலையிட்டு எமது மாணவர்களின் கல்வியையும் பரீட்சைப் பெறுபேற்றினையும் தொழில் முயற்சிகளையும் கடுமையாக பாதிப்படையச் செய்யும். இந்த மின் தடையையும் சீரற்ற மின் விநியோக பிரச்சினையையும் தீர்த்து வைக்க உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுநிற்கின்றோம் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)




இலங்கை வங்கியின் 78 ஆவது ஆண்டு நிறைவு விழா கிளிநொச்சி கிளையில் நேற்றைய தினம் கொண்டாடப்பட்ட வேளையில்... (படங்கள்: குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய மகாராணியிடமிருந்து இளைஞர் தலைமைத்துவ விருதுவென்ற இலங்கையர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரித்தானிய மகாராணியிடம் இருந்து விருது வென்ற இலங்கையர்களான ரகித மாலேவன மற்றும் செனெல் வன்னியாரச்சி ஆகிய இரு இளைஞர்களும் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

இந்த இரு இளைஞர்களும் இலங்கைக்கு பெற்றுத்தந்துள்ள பெருமையை பாராட்டிய ஜனாதிபதி, அவர்களது எதிர்காலத்திற்காக தனது ஆசிகளை தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளில் உள்ள மக்களிடம் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் தனிப்பட்ட திறன்களை பொதுமக்களின் வாழ்க்கையை மாற்றுவதற்காக பயன்படுத்தும் இளைஞர், யுவதிகளை அடையாளம் காண்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பொதுநலவாய நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 60 இளைஞர்களுக்கு பிரித்தானிய மகாராணியால் இவ்வாறு இங்கிலாந்து பக்கிங்ஹாம் மாளிகையில் விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கை அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல், இளைஞர்கள் மற்றும் பெண்களை விழிப்பூட்டல், பால் சமத்துவம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பில் அறிவூட்டுவதற்காக சமூக ஊடகங்களை பயன்படுத்தல் போன்ற விடயங்களுக்காக செனெல் வன்னியாரச்சிக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் இளைஞர் பிரதிநிதியான செனெல் வன்னியாரச்சி கொழும்பு பல்கலைக் கழகத்தின்சர்வதேச உறவுகள் தொடர்பான விசேட பட்டதாரியாவார்.

எச்.ஐ.வி. வைரசுக்கான ஒரு மருந்தை கண்டு பிடித்தமைக்காக ரகிதமாலேவனவுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலும் கொழும்பு பல்கலைக் கழகத்திலும் வெளி மருத்துவ ஆராய்ச்சியாளராக செயற்பட்டு வரும் ரகிதமாலேவன நாலந்தா கல்லூரியில் கல்வி கற்கும் காலப் பகுதியில் எச்.ஐ. வி. தொற்றுக்கான புதிய தொரு தடுப்பூசியை கண்டுபிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இளைஞர் விளையாட்டு விழா



கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் 29 ஆவது இளைஞர் விளையாட்டு விழா கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வெற்றியீட்டிய வீரர்களுக்கான கேடயங்களையும் வழங்கிவைத்தார். இங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எதிர்காலத்தில் வீரர்களின் திறன்களை வெளிக் கொண்டுவந்து தேசிய ரீதியில் பங்குபற்றவும் இலங்கை தேசிய அணியில் இந்த வீரர்கள் இடம்பெற தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (7-8)



நயினை அன்னை சிவகாமி அறக்கட்டளையின் மூலம் வவுனியா சிவன் முதியோர் இல்ல முதியோர்களுக்கு ஆடைகளும் உணவும் வழங்கப்பட்டன.

# வடமாகாண சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ள யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் சட்டத்தரணி வி.ரி. சிவலிங்கம் முன்னிலையில் நடைபெறும் என யாழ். வணிகர் கழகச் செயலாளர் சு.சிவகுமரன் அறிவித்துள்ளார். (இ

# தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (Computer Hardware Technician) பயிற்சி நெறியில் தேசிய தொழிற்றகைமைச் சான்றிதழைப் பெற யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை

க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.

தகுதியுடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10.08. 2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணனி வன் பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். இ

# கிளிநொச்சியில் உருவாக்கப்பட்டது ஸ்ரீ.சு.தனியார் பேருந்து சாரதி நடத்துநர் சங்கம்

கிளிநொச்சி மாவட்டத்திற்கான தனியார் பேருந்து சாரதிகள் நடத்துநர்கள் சங்க உறுப்பினர்கள் கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

பின்னர் சங்க நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு கிளி.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர தனியார் பேருந்து சாரதி நடத்துநர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்து பிரச்சினைகள் வெகு விரைவில் தீர்த்து வைக்கப்படும் என பாரா



தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் உடனான கலந்துரையாடலின் ளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நம்பிக்கை தெரிவித்தார். (8)

# உணவுப் பொதி வழங்கல்



யாழ். எருத்திடல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் போஷாக்கு உணவுப்பொதி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கழகத்தின் தலைவர் லயன் உ.சிசில்றெமின்டஸ் பாடசாலையின் முதல்வர் ஜே. தர்மதுரையிடம் இந்த உணவுப் பொதியை வழங்கினார்.

மேற்படி நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (இ

# வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உதவி



வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் 2017 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஊடாக குடும்பஸ்தர் ஒருவருக்கு அவரது வருமானத்தை அதிகரித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக மின்சாரத்தில் இயங்கும் சாணை பிடிக்கும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி நபர் தினமும் துவிச்சக்கர வண்டியிலே மன்னார் மாவட்டம் முழுவதும் பல மைல்கள் தூரம் பயணித்து கைகளினால் இயக்கும் தனது சிறிய சாணை பிடிக்கும் கருவி மூலம் வீடு வீடாக சென்று கத்தி, கோடரி போன்ற பொருட்களை சாணை பிடிப்பதை ஜீவனோபாயமாக கொண்டு தொழில் செய்து வாழ்ந்து வருகின்றார்.

மேலும் இவரது வயது காரணமாகவும் தொடர்ந்து பயணம் செய்வது மற்றும் தூர இடங்களுக்கு சென்று தொழில் செய்வதில் பல இடர்களை எதிர்நோக்குவதை அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்டியதன் காரணமாக அவருக்கு தொழில் செய்யும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் அவர் தன்னால் ஓர் இடத்தில் இருந்து தனது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என நம்பிக்கை தெரிவித்தார். (3-8)


# கண்ணீர் அஞ்சலி



எமது பருத்தித்துறை நிலையப் பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்
**கு.இந்திரகுமார்** அவர்களின்
தந்தையாரான
**வேலாயுதம் குமாரசாமி**
(ஓய்வுபெற்ற தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர், அகில இலங்கை சமாதான நீதவான், அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர்)
அவர்கள் 30.07.2017 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண நன்னடத்தை உத்தியோகத்தர் சங்கம்

(சி-9226)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தோல் நோயில் பயன்படும் சில மூலிகைக் குறிப்புகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்தமருத்துவத்தில்தோல் நோயாளிகளின் சிகிச்சை முக்கியமாகின்றது. ஏனெனில் நோய்கள் தோன்றுவதற்கு காரணமாகிய வாத, பித்த, கப தாதுக்களின் சமனிலை பாதிப்படைவதில் தோல் நோய்கள் ஏற்பட முக்கிய பித்த தாதுவின் அதிகரித்த நிலையே முக்கிய காரணமாகின்றது.

இதனால் ஏழு உடற்கட்டுக்களில் இரத்த தாதுவும் பாதிப்படைகின்றது. இரத்த தாதுவின் தாக்கம் தோலில் வெளிப்படுகின்றது. இதனாலேயே குறிகுணங்களுக்கு மட்டுமன்றிஅதிகரித்ததோஷங்களை சமனிலைக்கு கொண்டு வருவதற்காக் தோல் நோயாளிக்கு தேக வன்மை, நோயின் தாக்கம், வயது, பால் (sex) என்பவற்றிற் கேற்ப பேதி ஆரம்பத்தில் (purgative) கொடுக்கப் பட்டு அதிகரித்த பித்ததோ ஷத்தையும் குடலையும் சுத் தப்படுத்தி அதன்பின்பு இர த்தத்தை சுத்திகரிக்கும் (Bl ood Purificator) மூலிகை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

இல் ஆரம்ப சிகிச்சைக் கிரமத்தின் பின்பே குறி குணங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பின்வரும்மூலிகைகளை சாதாரணமாகநீங்கள் தோல் நோய்களுக்கு பயன்படுத்தலாம்.

1.வண்டுகொல்லி:- cass ia alata

இதன் இலையை இடித்து சாறு எடுத்து தேசிப்புளிச் சாறு கலந்து வட்டக்கடிக்கு பூசலாம்.

வண்டுகொல்லிச்சாறு ஒருடம்ளருடன்தேங்காய்எண்ணெய் ஒரு டம்ளர் (200 மில்லி) கலந்து சாறு வற்றும் வரை காய்ச்சி அவ் எண்ணெயையும் வட்டக்கடிக்கு பூசலாம்.

வண்டு கொல்லி இலைகளை நன்கு கழுவி சிறிது சிறிதாக அரிந்து நெய்யில் வதக்கி வயது வந்தவர்கள் (adult) ஒரு மேசைக்கரண்டியளவு எடுக்க மலம் நன்கு இளகி வெளியேறி வட்டக் கடியிலும் அரிப்பு குறையும்.

2. பூவரசு:- Thesp esia populnea

இதன் பழுத்த இலைகளை அரைத்து வெதுப்பி வீக்கத்திற்கு பழுக்காத கட்டிகளுக்கு பூசலாம்.

இதன் பூக்களை அரைத்து சிரங்கிற்கு பூசலாம்.

பூவரசம் காயை இரண்பாகநறுக்கினால்மஞ்சள்நிறத் திரவம் இறங்கும். எவ்வித மான தோல் அரிப்பு ஏற்படும் நோய்களிற்கும் இம் மஞ்சள் திரவத்தை பூசலாம். முக்கியமாக படர்தாமரைக் கும் (தேமல்) பூசலாம்.

3. வேம்பு:-Azadira chta indica

வேப்பிலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து சொறி சிரங்கிற்கு பூசலாம். எவ்விதமான தோல் நோய்களிலும் வேப்பிலையை அவித்து அந்நீரால் கழுவிவர தொற்றுக்கள் அகலும்.

4. காக்கலைன்:- Clitoria ternata

இதன் இலைகளை கழுவி அரைத்து தலையில் தேய்த்து முழுகிவர பொடுகு தலை அவியல் (மண்டைக்கரப்பான்) ஆகியவை நீங்கும்.



5.பொடுதலை:- phyla nodiflora

இதன் செடிகளை சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி அதனுடன் சிகைக்காய், வெந்தயம், உலர்ந்த செவ்வரத்தம்பூக்கள் ஆகிய வற்றை சேர்த்து பொடியாக்கி சுடுநீரில் கரைத்து அடிமயிருக்கு தேய்த்து முழுகிவர பொடுகு முற்றாக அகலும் முடியும் உதிராது.

6.கார் போகரிசி:- Psoralia Zorylifolia

கார்போகரிசியை முதலில் பசும்பாலில் காய்ச்சி இவற்றை கழுவி உலர்த்தி அதன்பின்பு

கார்போகரிசி-35கிராம்
அதிமதுரம்-35 கிராம்
கிச்சிலிக்கிழங்கு-35 கிராம்

எடுத்து இடித்து பசும்பாலில் அரைத்து அரைத்த விழுதை 700மில்லி தேங்காய் எண்ணெயில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து புட்டியில் அடைத்து வைத்துக்கொள்ள வேண்டும். மெலானின் நிறப்பொருள் தினமும் பூசி வர வெண்படை படிப்படியாக குறையும்.

7. சந்தனம்:-Sonta lum album

சந்தனத்தை பச்சைக்கார்ப்பூரத்துடன் அரைத்து அக்கி, வியர்க்குருவிற்கு பூசலாம்.

8.கற்றாளை:-Aloevera

இதன் இலையின்தோலையும் கரை முட்களையும் நீக்கி சிறுசிறு துண்டுகளாக உள் சோற்றை (jel)வெட்டி 6,7 முறை நீரில் கழுவி ஒரு துண்டை சிறிது சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டுவர இரத்தம் சுத்திகரிக்கப்படுவதோடு தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் வரும்.

அல்லது இதன் சாற்றை முகத்திற்கும் உடல் முழுமையும் பூசி 1/2 மணிநேரம் ஊறவிட்டு குளித்து வந்தாலும் தோல் அரிப்பு நீங்கி தோல்மென்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

9. ஆடு தீண்டாப்பாளை:- Aristalochia bracteolata

இதன் செடியை இடித்து சாறு எடுத்து அதேயளவு நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி பக்குவத்தில் வடித்து தோலில் ஏற்படும் கரும்படை கரப்பானிற்கு பூசலாம்.

10.காட்டு பச்சிலை:- pogostemon heyneanus

இதன் இலைகளை நன்கு கழுவி பட்டுப் போல அரைத்து பேன்களுக்கும் புண்களுக்கும் பூசிவரலாம்.

11. கஸ்தூரி மஞ்சள்:- Curcuma aromatica

இதனை அரைத்து தேய்த்து குளிர்த்தால் கரப்பான் புண்கள் நீங்கும்.

12.மஞ்சள்:-curcuma longa

பச்சை மஞ்சள் கிழங்குகளை இடித்து சாறு எடுத்து அதன் சாற்றை புண் வீக்கத்திற்கு பூசலாம்.

வேப்பிலையுடன் மஞ்சளை அரைத்து அம்மைக் கொப்பளங்களிற்கு பூசலாம்.

மஞ்சள் சுட்ட சாம்பலை சிறிது நேரம் தேய்காய் எண்ணெயில் சுடாக்கி படர் தாமரைக்கு (தேமல்) பூசலாம்.

13.தேள்கொடுக்கு:- Helitropium indicum

இதன் இலைச்சாற்றுடன் தேசிப்புளி சேர்த்து தேள் கொட்டிய இடத்தில் பூசலாம்.

14. அனிச்சை:-Rhina chaonthus nausta

அனிச்சை இலைகளை நன்கு கழுவி மஞ்சலுடன் சேர்த்து அரைத்து வரும் பசையை சிரங்கு கரப்பானிற்கு பூசலாம்.

15: வட்டத்துத்தி:-Ab ultilon inducum

இதன் வேர்ப்பட்டைகளை சேகரித்து கழுவி உலர்த்தி 35 கிராமிற்கு 350 மில்லி நல்லெண்ணெய் சேர்த்து வேர்ப்பட்டை சிவக்கும் வரை காய்ச்சி வடித்து ஆறவிட்டு முகப்பருவிற்கு பூசிவர பருக்கள் நீங்கி முகம் வசீகரமாகவும் வரும்.

16. குப்பிளாய்:- Vernonia zeylanica

குப்பிளாய் இலைகளை அரைத்து சாறு எடுத்து தேசிப்புளி சேர்த்து சிரங்கு, கரப்பானிற்கு பூசலாம்.

17.சரக்கொன்றை/ கொண்டல்:- Cassia fishula

இதன் இலைகளை அரைத்து படர்தாமரைக்கு பூசலாம். இதன் இலைக்கொழுந்துகளை அவித்து பிழிந்த சாறு 60 மில்லியுடன் சீனி கலந்து கொடுக்ககுடற்புழுக்கள் வெளியேறும்.

18.குப்பைமேனி:- Acalypha indica

இதன் இலைகளை மஞ்சளுடன் சேர்த்து அரைத்து சிரங்கு, கரப்பானிற்கு பூசலாம். இலைகளில் கல்சியம், பொட்டாசியம், இரும்புச் சத்துக்கள் இருப்பதால் முளைக் கீரையுடன் சேர்த்து 4,5 குப்பைமேனி இலைகளையும் சேர்த்து கீரை சமைத்து உண்ணலாம்.

19.புங்கு:- pongamia pinnata

இதன் வேர்ப்பட்டைகளை சேகரித்து பிழிய வெண்ணிற பால் வடியும். இதனை கரப்பான், சிரங்கிற்கு பூசலாம்.

20. மருதோன்றி:- lowsonia spinosa

இதன் இலைகளை தேசிப்புளிச்சாற்றுடன் சேர்த்து அரைத்து நகத்தின் அடியில் ஏற்படும் பங்கசு தொற்றிற்கு பூசிவர முற்றிலும் ஆறும்.

21. திருநீற்றுப்பச்சை

இதன் இலைகளை தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சி முகப்பருவிற்கு பூசலாம். இதன் இலைச்சாற்றை படர்தாமரைக்கும்பூசி வரலாம்.

முகத்தில் எண்ணெய்ப் படையிருப்பின் எலுமிச்சம் பழத்தோல்களை உலர்த்தி நுண்ணிய பொடியாக்கி முகத்தை ஈரமாக்கிக் கொண்டு அதன் மீது இப் பொடியை பூசி நன்கு உலர்ந்ததும் கழுவி விடவும். எண்ணெய்ப் பசை முகத்தை விட்டு நீங்கும்.

புழுவெட்டிற்கு சிறிய வெங்காயத்தை பாதியாக நறுக்கி புழுவெட்டு பகுதியில் அழுத்தி தேய்த்து 15 நிமிட நேரம் ஊற வைத்து குளித்து வரவும். தொடர்ந்து செய்து வர புழுவெட்டு நீங்கி முடி வளர ஆரம்பிக்கும். அல்லதுபிஞ்சுஊமைத்தங்காயைநன்றாகமைபோல அரைத்தும் புழுவெட்டு உள்ள இடத்தில் பூசிவரலாம்.

பெரிய அம்மான் பச்சரி செடியை ஒடித்தால் பால் வரும். அப்பாலை தோலில் ஏற்படும் உண்ணிகளுக்கு விட்டுவர அவை சீக்கிரம் விழுந்து விடும்.

சலவை செய்த பருத்தி நூல் துணியை சுட்டுக் கரியாக்கி அக் கரியை தேங்காய் எண்ணெயில் கலந்து பூச சேற்றுப் புண் குணமாகும். முகத்தோல் சுருக்கத்திற்கு கசகசாவை ஊறவைத்து அரைத்து முகத்தில் பூசி 1/2 மணிநேரம் கழித்து வெது வெதுப்பான நீரில் கழுவ தோல் சுருக்கம் மறையும்.

முகத்தில் கழுத்துப் பகுதியில் துப் பகு தியில் மருக்கள் காணப்பட்டால் ஒரு கைப்பிடியளவு அம்மான்பச்சரி இலைகளுடன் 10 மிளகு சேர்த்து அரைத்து அந்த விழுதை 75 மில்லி தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்சி வடிகட்டி தினமும் மருக்களின் மீதுபூசிவர நாளடைவில் மருக்கள் மறையும்.

திருநீற்றுப் பச்சிலைகளை மஞ்சள் சேர்த்து அரைத்து பாசிப்பயற்றை மாவுடன் சேர்த்து அரைத்து தோலில் ஏற்படும் பாலுண்ணிகளுக்கு அழுத்தி தேய்த்து கழுவி வர பாலுண்ணிகள் அகலும்.

முகத்தில் கரும்புள்ளிகள் இருப்பின் ஒரு எலுமிச்சம் பழத்தை சாறு பிழிந்து தயிர் சமமாக கலந்தால் கிரீம்போல் ஆகும். அதை முகத்தில் பூசி சுமார் 15 நிமிடம் கழித்து வெந்நீரில் முகத்தை கழுவிவர கரும்புள்ளிகள் மெல்ல மெல்ல மறைந்து வரும்.

### உணவு முறைகள்

இரவு படுக்க போகு முன்பு வெந்நீரையும் காலை எழுந்ததும் பல் துலக்கி 400 மில்லி குளிர்ந்த நீரையும் பருகி வர உடல் உஷ்ணம் தணிந்து தோல் நோய்கள் வராமல் பாதுகாக்கலாம்.

எண்ணெய் பொருட்கள், எண்ணெயில் பொரித்த பண்டங்கள், கொழுப்பு மிகுந்த உணவு, காரம், உப்பு, புளி ஆகியவற்றை இயலுமான வரை தவிர்த்தோ குறைத்தோ பயன்படுத்தவும்.

மாமிசஉணவுகள், மசாலா பொருட்களை குறைத்துப் பயன்படுத்தவும். காலையில் தயிர் சாதம், கனிந்த வாழைப்பழம் சாப்பிடலாம்.

இனிப்பு, மாப் பண்டங்களை குறைத்துப் பயன்படுத்தவும். கீரை, பழவகைகளை அதிகமாக பயன்படுத்தவும்.

### குறிப்பு

இங்கு குறிப்பிடப்பட்ட அனைத்து மூலிகைகளும் யாழ்ப்பாணத்தில் கிடைக்கக் கூடியவையே. ஏற்கனவே வாரம் ஓர்மூலிகை பகுதியில் தனித்தனி கட்டுரைகளாக பிரசுரமாகியது (பெறப்படும் இடங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 28 பேர் விரைவில் மகிந்தவுடன்

## மகிந்தானந்த அளுத்கமகே தகவல்



நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 28 பேர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இரண்டாம் திகதியளவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணையவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மூலம் பெறப்பட்ட பணம் அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு மாத்திரம் செல்லவில்லை. கடந்த பாராளுமன்ற தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களுக்கு ஐம்பது இலட்சம் ரூபா வரையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அப்பணம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவிலிருந்தே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எனவே அப்பணம் மத்தியவங்கி பிணைமுறி மோசடி மூலம் பெறப்பட்டதாகும்.

மேலும் தற்போது நல்லாட்சி அரசாங்கத்திற்குள் உள்ளக ரீதியில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அமைச்சர் டிலான் பெரேரா சுதந்திரக் கட்சியின் செயலாளரை அப்பதவியிலிருந்து விலகுமாறு தெரிவித்தார்.

அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவை கட்சியிலிருந்து வெளியேறுமாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதில் மிகுந்த பங்களிப்பு வழங்கிய மக்கள் விடுதலை முன்னணி தற்போது அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுகிறது.

ஆகவே தற்போது அரசாங்கத்தின் பலம் சடுதியாக வீழ்ச்சி கண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கருணாவின் கனவு பலிக்காது



தனியொரு மாற்று தமிழ் சக்தியாக உருவாகுவதற்கு முன்னாள் பிரதியமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் முயற்சிப்பது, நிறைவேறாத பகற்கனவாகுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான யு.எல்.எம்.என்.முபீன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களை முஸ்லிம்களிடம் இருந்து மீட்பதற்கான போராட்டத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் இணைந்துகொள்ள வேண்டுமென, அண்மையில் கருணா அம்மான் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முபீன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும் சிறுபான்மையினர் ஒற்றுமைப்படுதலின் ஊடாகவே, அவர்கள் தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்ற கருத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்ற வேளையில் கருணாவின் இந்தக் கூற்றில் பல்வேறு சதித் திட்டம் கொண்ட பின்னணிகள் இருப்பதை சந்தேகிக்க வேண்டியுள்ளதெனவும் முபீன் தெரிவித்துள்ளார். (இ-7)

## வல்லப்பட்டையுடன் சென்னை செல்ல முற்பட்டவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக 6 இலட்சம் ரூபா பெறுமதியான ஒருதொகை வல்லப்பட்டைகளை கடத்த முற்பட்ட நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை சென்னை நோக்கிச் செல்ல விருந்த குறித்த பயணியின் பையை சோதனையிட்ட போது, அதில் வல்லப்பட்டைகள் இருப்பது தெரிய வந்ததாக, சுங்க பிரதிப் பணிப்பாளர் பராகிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, சுமார் 8 கிலோ கிராம் வல்லப்பட்டைகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை சந்தேக நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வரலக்சுமி விரதம்

உரும்பிராய் ஸ்ரீ காளி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 8 மணிக்கு வரலக்சுமி காப்பு கட்டும் நிகழ்வு இடம்பெறுவதோடு நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (இ-78)

## "ஈழத்தில் முருக வழிபாடு" ஆறாம் நாள் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீக சிறப்பு நிகழ்வின் ஆறாம் நாளான இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறும். சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் "ஈழத்தில் முருக வழிபாடு" எனும் தலைப்பில் சைவப்புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் செ.பரமேஸ்வரன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசையரங்கின் 6-ம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஆறாம் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு சி.கனகாம்பரி, வயலின் ப.சியாமகிருஷ்ணா, மிருதங்கம்-க.நந்தகுமார், கடம் அ.செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## கந்தபுராண எழுச்சி விழாவின் ஆறாம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் ஆறாம் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவினை சைவப்புலவர் கந்த சத்தியதாசன், செல்வி.மதுராங்கினி நந்தகோபால், விஜய குமார சர்மா நித்திய ஷரூப சர்மா ஆகியோர் வழங்கும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும். (இ-3)




## காத்தருள்வான் கந்தன்



ஆறுபடை வீடு கொண்ட
ஆறுமுகப் பெருமானே
வண்ண மயில்மீது அமர்ந்திருந்து
பக்தர்களை காத்து வரும்
நல்லை நகர் பெருமானே
வாளெடுக்கும் கூட்டம் இங்கே
உலாவுகின்ற காலமைய்யா
வேலெடுத்து வாருமைய்யா
மன நிம்மதியை தாருமைய்யா

க.மலர்,
சிறுவர் இல்லம்
திருநெல்வேலி.

## நல்வரம் நல்கிடுவாய்

நான்முகனைச் சிறையடைத்த ஞானபண்டிதா!
நம்பினோர்க்கு அருள் புரியும் நல்லூர் நாதா!
அன்னை சக்திவேல் வாங்கி அசுரரை அழித்தவா!
அமரர் குறை தீர்த்தாய் சூரசங்காரா!
அப்பனுக்குப் பாடம் சொன்ன அழகு சுந்தரா!
ஆறுமுகா அருள் தரனும் நல்லூர் கந்தையா!
பழத்திற்காக ஆண்டியானாய் பழனியாண்டவா- உன்
பக்தரிடம் இறங்கிவரும் பரம பாலகா!
நல்லூரில் கோவில் கொண்டாய் நற்குரு நாதா!
நல்ல வரம் நல்கிடுவாய் நல்லை நாயகா!

பொ.புனிதன்
வரியப்புலம்.

## ஆறுதலை தருவாய் கந்தா

அலைகடல் என திரண்டும் மக்களின் நடுவே
ஆறுதலை தந்திடுவாய் ஆனைமுகன் தம்பியே
இன்னல்கள் யாவும் தீர்த்திடுவாய் கந்தா
ஈன்று எடுத்த அன்னையவள் போல் எமை காத்திடுவாய்
உலகத்தவர் அனைவரும் வணங்கிடும் உமை பாலா
நல்லூர் என்னும் பதியில் வீற்றிருக்கும் நல்லூர் கந்தா
நாளெல்லாம் உனை நினைத்திட வரம் அருள்வாய்

லலிதாம்பிகை மகாதேவன்
நவாலியூர்.

## நல்லைக் கந்தன், புகழை "பா" வரிகளால் தீட்ட எட்டு வரிகள் போதாது

வள்ளி, தெய்வானையுடன் புள்ளி மயில் மீதினில் ஏறி
எட்டுத் திக்கும் புகழ் பரப்பி வீதி வலம் வரும் - முருகோனே
உன்னை நம்பியோரின் பாவ வினை தீர்க்கும்
யாழ். நல்லூர் பதியுறை வாழ் - அரியோனே,
வட மாநிலத்தில் கொடிய போரைப் போக்கி
நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டிய - திறலோனே
நல்லைக் கந்தன் புகழை "பா" வரிகளால் தீட்ட
எட்டு வரிகள் போதாது எண்ணாயிரம் கோடி வரிகள் வேண்டுமே- குமரோனே

திருமதிமலர்விழி கனகசபை
கலாவித்தகர் -கலைமாமணி
சண்டிலிப்பாய்.

## நல்லைக்கந்த சந்தப் "பா"



வாழ்வு இற்றவர் வழியு மற்றவர்
வந்துன் பாதமே பற்றி யுற்றவர்
தாழ்வு நீக்குவாய் தாகம் போக்குவாய்
தத்த ளிக்கையில் வந்து தூக்குவாய்
ஊழ்வி னைகளி லுழலு வோர்களும்
உன்னை யேசரண் கொண்டு நின்றிடில்.
மூள்வி னைகளை மூழ்க்கும் வேதகா
முத்த மிழ்ப்பதி நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாரதம்

# தேர்தலில் வெற்றி பெற்றதாக வெனிசுலா ஜனாதிபதி அறிவிப்பு

## ● எதிர்க்கட்சிகள் போராட்டம்
## ● சர்வாதிகாரி என அமெரிக்கா விமர்சனம்

(வோஷிங்டன்)

**வெனிசுலாவில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபை தேர்தலில் வெற்றி பெற்றதாக ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அறிவித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்திய அதே வேளை வெனிசுலா ஜனாதிபதிக்கு அமெரிக்கா திடீர்த் தடை விதித்து சர்வாதிகாரி என விமர்சனமும் வெளியிட்டுள்ளது.**



தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் புதிய அரசியலமைப்பு சட்டம் இயற்றுவதற்காக ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ முடிவு செய்திருந்த நிலையில், இதற்கான அரசியல்நிர்ணய சபை உறுப்பினர்களை நியமிப்பதற்கான தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதனிடையே, எதிர்க்கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் பாராளுமன்றத்தை கலைக்கும் நோக்கில் நடத்தப்படும் இத்தேர்தலை எதிர்க்கட்சிகள் அனைத்தும்புறக்கணித்தன. மேலும் தேர்தலுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்தன. சில இடங்களில் வாக்குச் சாவடிகள் சூறையாடப்பட்டன.

இதைத்தொடர்ந்து பாதுகாப்பு படையினர் பல இடங்களில் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் வேட்பாளர் ஒருவர் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். இந்த வன்முறைக்கு மத்தியிலும் பெரும்பாலான மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

இத்தேர்தல் முடி வடைந்ததும், பதிவான வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்டன.

இதில் தங்களுக்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்திருப்பதாக ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ நேற்று முன்தினம் அறிவித்தார். கடந்த 18 ஆண்டு கால வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய புரட்சி என தனது ஆதரவாளர்கள் மத்தியில் அவர் பேசினார்.

ஆனால் இது ஒரு மோசடி நடவடிக்கை என்று வர்ணித்துள்ள எதிர்க்கட்சிகள், அரசுக்கு எதிரான் போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு அமெரிக்க நிர்வாகம் தடை விதித்துள்ளது. மதுரோ ஒரு சர்வாதிகாரி என்றும் அமெரிக்கா கடுமையாக விமர்சித்துள்ளது. வடகொரிய ஜனாதிபதி கிம் ஜான்-உன், சிரிய ஜனாதிபதி ஆசாத் ஆகியோருக்கு பிறகு மதுரோ மீது அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (3-8)

# வெள்ளை மாளிகையில் தொடரும் இராஜினாமா




(வோஷிங்டன்)

வெள்ளை மாளிகை யின் தகவல் தொடர்பு இயக்குநராக 10 நாட்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட அந்தோனி ஸ்கா ராமுக்சை தனது பதவியை இராஜினாமா செய்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரபூர்வ அலுவலகமான வெள்ளை மாளிகையின் தகவல் தொடர்பு துறையின் இயக்குநராக பணியாற்றிய மைக் டுப்க், ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் கடந்த மே மாதத்தில் இராஜினாமா செய்தார். இதனால், காலியாக இருந்த அப்பொறுப்புக்கு நியூயோர்க்கைச் சேர்ந்த நிதியாளர் அந்தோனி ஸ்காராமுக்சை நியமித்து கடந்த 10 நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

ட்ரம்ப்பின் இம்முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பு அதிகாரியாக இருந்த சீன் ஸ்பைசர் தடாலடியாக இராஜினாமா செய்தார். இந்நிலையில், வெள்ளை மாளிகையின்புதியதலைமைபணியாளராக ஜான் கெல்லி நேற்று முன்தினம் பதவியேற்றார்.

ஆனால், ஜான் கெல்லி தலைமை பணியாளராக பொறுப்பேற்றதை ஏற்றுக் கொள்ள முடியாத தகவல் தொடர்பு இயக்குநர் அந்தோனி ஸ்காராமுக்சை தனது பதவியை அதிரடியாக இராஜினாமா செய்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். வெள்ளை மாளிகையின் பல்வேறு முக்கிய அதிகாரிகள் தொடர்ந்து கருத்தொற்றுமை ஏற்படாமல் தங்களது பதவிகளை இராஜினாமா செய்வதால் ஜனாதிபதி ட்ரம்ப் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளார். (3-8)

# 10 வாரங்களில் கட்டப்பட்ட உலகின் மிக நீளமான தொங்கும் நடை மேம்பாலம்

(சுவிட்சர்லாந்து)

சுவிட்சர்லாந்து நாட்டில் மலைகளை இணைக்கும் உலகின் மிக நீளமான தொங்கும் நடை மேம்பாலம் 10 வாரங்களில் கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள மெட்டர்கான் மலைகளை செர்மட் நகரங்களை இணைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன் செர்மட் பள் ளத்தாக்கை கடப்பதற்கு 4 மணி நேரம் ஆகும். மேம்பாலம் கட்டியதன் மூலம் வெறும் 10 நிமிடமாக குறைந்துள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

உள்ளது. அதிக உயரத்தை விரும்புவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு இந்த மேம்பாலத்தில் பயணம் செய்வது அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

இதற்கு முன்பாக ஜேர்மனி நாட்டில் உள்ள டைடன் ஆர்.டி தொங்கும் பாலம் தான் உலகின் மிக நீள மான நடை மேம்பாலமாக இருந்து வந்தது. அந்தசாதனையை சுவிட்சர்லாந்து மேம்பாலம் முறியடித்துள்ளது. உலகின்மிக நீளமான இந்நடை மேம்பாலம் 10 வாரங்களில் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-8)



இணைக்கும் உலகின் மிக நீளமான நடை மேம்பாலம் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. இந்த மேம்பாலம் சுவிட்சர்லாந்தின் கிராச்சென் மற்றும்

இந்த மேம்பாலம் தரையிலிருந்து 85 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அகலம் 65 செ.மீற்றராகும். இது கடல் மட்டத்திலிருந்து 7218 அடி உயரத்தில்

# தொடரும் 2



(குஜராத்)

குஜராத்தில் தொடர்ந்து அதிகரித்து வரும் வெள்ளப்பெருக்கின் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 126 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு இந்தியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக அசாம், குஜராத், ஒடிசா, அரியானா, உத்தரகாண்ட் உள்ளிட்ட மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதோடு சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இந்நிலையில் குஜராத்தில் வெள்ளம் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்படுவதோடு 55 ஆயிரத்திற்கும் அதிக

# பெண் இராணு பலப்படுத்

## கடல் - மலைகளி

(பீஜிங்)

சீனாவில்பெண்இராணுவபடையை பலப்படுத்த கடல் மற்றும் மலைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொண்டு எதிரிகளின் தாக்குதலை சமாளிக்க இத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது.

கம்யூனிச நாடான சீனாவில் மக்கள் விடுதலைப்படை என்ற பெயரில் இராணுவம் உள்ளது. உலகில் அதிக வீரர்களை கொண்ட பலம் வாய்ந்த 2-வதுஇராணுவமாகஅதுவிளங்குகிறது.

இந்த இராணுவத்தில் அனைத்து பெண்கள் சிறப்பு படை பிரிவும் உள்ளது. இது கடந்த 2013-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதில் பணிபுரியும் பெண்கள் உடல் ரீதியாகவும்,

# 7 தொழிலாளர்க தலை துண்டித்த

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் மரம் வெட்டுத் தொழிலாளர்கள் ஏழு பேரின் தலையை துண்டித்து தீவிரவாதிகள் வெறிச்செயலில் ஈடுபட்டனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் தீவிரவாதிகள் ஆதிக்கம், போதைப் பொருள் கடத்தல் கும்பலின் அட்டகாசம் உள்ளது. அவர்களை ஒடுக்க புதிய ஜனாதிபதி ரோட்ரிகோ டியூட்ரெட் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் பிலிப்பைன்சில் உள்ள அபு சாயப் என்ற தீவிரவாத கும்பல் சமீபத்தில் மரம் இழுக்கும் தொழிலாளர்களை கடத்தி சென்றது. அவர்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கிடையே அவர்களில் 7 பேர் தலை துண்டித்து கொலை செய்யப்பட்ட நிலையில் பேசிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## உயிர்ப்பலி



மான மக்கள் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு குஜராத் அரசு சார்பில் தலா 4 இலட்சம் ரூபாயும், பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா 2 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, அடைமழை தொடர்வதன் காரணமாக மீட்புப் பணிகள் தாமதமடைந்துள்ளதாகவும் இதனால் மேலும் 12 தேசிய பேரிடர் மீட்புக் கு[illegible]வினர் குறித்த மாநிலத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3-8)

## ணுவ படையை த்தும் சீனா

### ளில் போர் பயிற்சி

மன ரீதியாகவும் சக்தி படைத்தவர்களாக திகழ்கின்றனர்.

முன்பு அலங்கார அணி வகுப்புக்கு மட்டுமே இவர்கள் பயன்படுத்தப்பட்டு வந்தனர். தற்போது இவர்களுக்கு கடுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்[illegible]ளைப் போன்று கைத் துப்பாக்கி, து[illegible]க்கி சுடும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் எந்திர துப்பாக்கிகளை கையாளும் விதமும் கற்றுத் தரப்படுகிறது.

தற்போது இவர்களுக்கு கடும் குளிர் தாக்கும் மலைகளிலும், ஆழ் கடலிலும் போர்ப்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொண்டு எதிரிகளின் தாக்குதலை சமாளிக்க இத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது. (3-8)

## ர்களைக் கடத்தி த் தீவிரவாதிகள்

தீவில் உள்ள ஒரு மலை கிராமத்தில் கிடந்தனர்.

அவர்களின் உடல்களை கைப்பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அபுசயாப் தீவிரவாதிகள் பொதுமக்களை கடத்தி பிணைக் கைதிகளாக்கி பணம் பறித்து வருகின்றனர்.

ஆனால் கடத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு பிணைத் தொகை எதுவும் கேட்கவில்லை. எனவே படுகொலை செய்ததற்கான காரணம் தெரியவில்லை.

இதற்கிடையே வெளிநாடுகளை சேர்ந்த 20 பேரை அபுசயாப் தீவிரவாதிகள் கடத்தி பிணைத் தொகை கேட்டு மிரட்டி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அவர்களை பாசிலின் மற்றும் கலு தீவுகளில் அடைத்து வைத்திருப்பதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது. (3-8)

## வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல்

# ட்ரம்ப், ஜப்பான் பிரதமருடன் பேச்சு

(வோஷிங்டன்)

வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபேயை நேற்றுமுன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

வடகொரியா கடந்த வெள்ளிக்கிழமை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.

இந்த ஏவுகணையால் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அமெரிக்க நகரங்களையும் தாக்க முடியும்.

ஏற்கனவே இதேபோன்ற ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தி இருந்ததால் 2-வது சோதனையால் அமெரிக்கா கடும் அதிர்ச்சி அடைந்தது.

இதையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபேயை நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது இரு தலைவர்களும், வட கொரியாவின் சமீபத்திய ஏவுகணை சோதனை அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா மற்றும் அருகாமை



யிலும், வெகு தொலைவிலும் உள்ள நாடுகளுக்கு நேரடியாக விடுத்த பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டனர். மேலும் வடகொரியா மீதான பொருளாதார தடைகளை அதிகரிப்பதுடன், தூதரக ரீதியான அழுத்தத்தை கொடுக்கவேண்டும் எனவும், இதே நிலைப்பாட்டை மற்ற நாடுகளும் எடுக்க வலியுறுத்துவது என்றும் இருவரும் உறுதி கொண்டனர்.

தென்கொரியாவையும், ஜப்பானையும் தாக்குவதற்கு யாராவது முயற்சித்தால், இந்த இரு நாடுகளையும் பாதுகாக்க தனது முழு இராணுவ பலத்தையும் அமெரிக்கா அளிக்கும் என்றும் அப்போது ஷின்ஷோ அபேயிடம் ட்ரம்ப் உறுதியாக தெரிவித்தார். (3-8)

# ஈராக் தூதரகம் மீது தற்கொலைப்படை தாக்குதல்

## 7 பொலிஸார் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள ஈராக் தூதரகம் மீது ஐ.எஸ். பயங்கரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர். 4 இடங்களில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன. இதில் 7 பொலிஸார் பலியாகினர்.

தலைநகர் காபூலிலுள்ள ஈராக் தூதரகத்தை குறிவைத்து தாக்குவதற்காக நேற்று முன்தினம் காலை 4 பயங்கரவாதிகள் வந்தனர்.

அவர்கள் எந்திர துப்பாக்கி, சக்தி வாய்ந்த கையெறி குண்டுகளையும் வைத்திருந்தனர். அவர்களில் ஒருவன் தனது உடலை சுற்றி கட்டியிருந்த வெடிகுண்டுகளுடன் தூதரகத்துக்குள் நுழைய முயன்றான்.

பிரதான நுழைவு வாயிலில் பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸார் அவனை உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. இதனால் தனது உடலில் கட்டிக் கொண்டு வந்திருந்த வெடிகுண்டுகளை அவன் வெடிக்க வைத்து தூதரகத்தின் நுழைவு வாயிலை தகர்த்தான்.

இதில் சம்பவ இடத்திலேயே அவன் உடல் சிதறி பலியானான். தூதரக பாதுகாப்புக்கு நின்றிருந்த 7 பொலிஸார் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பயங்கரவாதி கையெறி குண்டுகளை வீசியபோது எழுந்த புகை மண்டலத்தை பயன்படுத்தி அவனுடன் வந்த மற்ற 3 பயங்கரவாதிகளும், ஈராக் தூதரகம் அருகில் இருந்த கட்டடங்களுக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர்.

அங்கு விரைந்து வந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் அவர்களை நாலாபுறமும் முற்றுகையிட்டனர்.


அப்போது பயங்கரவாதிகள் அப்பகுதியில் ஏற்கனவே 4 இடங்களில் பதுக்கி வைத்திருந்த குண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இதில் ஏராளமான பொது மக்கள் சிக்கி படுகாயம் அடைந்தனர்.

அதே நேரம், கட்டடங்களுக்குள் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் தங்களை முற்றுகையிட்ட பொலிஸார், இராணுவத்தினர் மீது எந்திர துப்பாக்கிகளால் சரமாரியாக சுடத் தொடங்கினர். கையெறி குண்டுகளையும் வீசினர்.

இதனால் பாதுகாப்பு படையினரும் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டனர். பல மணி நேரம் இத்துப்பாக்கி சண்டை நீடித்தது. இறுதியில் பயங்கரவாதிகள் 3 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். (3-8)



## அமெரிக்கவாழ் தமிழர்களால் செழிக்கப்போகும் தமிழகம்



(வோஷிங்டன்)

தமிழக விவசாயிகள் போராடிக்கொண்டு வரும் நிலையில், தமிழகத்தின் வரட்சியைப் போக்க, அமெரிக்கவாழ் தமிழர்கள் மொய் விருந்து நடத்தி நிதி சேகரித்து வழங்கி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மொய் விருந்து எனப்படுவது ஏழைக் குடும்பத்தினருக்கு உதவி செய்ய பணம் வசூலிக்க நடைமுறைப்படுத்தும் ஒரு வழக்கமாகும். தமிழகத்தில் சில மாவட்டங்களில் இது பிரபல்யமானதாகவும் காணப்படுகின்றது.

நெல்லை - அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் எய்ம்ஸ் இந்தியா எனப்படும் அமைப்பு, அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்கள் இணைந்து குறித்த மொய் விருந்துப் பணியை முன்னெடுத்துள்ளன.

மேலும், இதன் போது வழங்கப்பட்ட விருந்தில் தமிழகத்தின் பாரம்பரிய உணவு வகைகள் பரிமாறப்பட்டதுடன், தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பாரம்பரிய நிகழ்வுகளும் அழிந்து வரும் பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம் பெற்றுள்ளன.

குறித்த நிகழ்வின் போது திரட்டப்பட்ட நிதியானது எய்ம்ஸ் இந்திய அமைப்புக்கு வழங்கப்பட்டு அதன் ஊடாக நெல்லை, கோவை, அரியலூர், கடலூர் மாவட்டங்களின் ஏரிகள் தூர் வாரப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதனூடாக மொத்தமாக சுமார் 100 ஏக்கர் பரப்பளவிலான ஏரிகள் தூர்வாரப்படவுள்ளதாகவும், ஆறு கிராமங்கள் பயனடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# ஜனாதிபதி ட்ரம்ப் நிலைதடுமாறியுள்ளார்

## வெனிசுலா ஜனாதிபதி

(கராகஸ்)

சட்டமன்றத் தேர்தலில் தான் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, குறித்த நிலைமைக்கு முகங்கொடுப்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிலைதடுமாறியுள்ளார் எனவும் அதனாலேயே வெனிசுவேலா மீது தடைகளை விதித்துள்ளார் எனவும் ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோ தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் குறித்த தேர்தல் தொடர்பில் கடும்



விமர்சனம் தெரிவித்த மெக்ஸிக்கோ, பெரு, கொலம்பியா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகள் தொடர்பிலும் தான் அதிருப்தியடைவதாக மடுரோ குறிப்பிட்டிருந்தார்.

நாட்டின் அரசியலமைப்பை மாற்றியமைக்கும் வண்ணம் வெனிசுலாவில் நடத்தப்பட்ட தேர்தலில் மதுரோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெனிசுலா மீது அமெரிக்கா புதிய தடைகளை விதித்தது. அத்துடன், சர்வாதிகார முறைமையையே வெனிசுலா பின்பற்றப் போகின்றது என வும் அது அவமானத்திற் குரிய விடயம் எனவும் ட்ரம்ப் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க அதிகார சபைக்கு உட்பட்ட மதுரோவின் சொத்துக்கள் யாவும் முடக்கப்படுதல் மற்றும் வெனிசுலாவுடன் அமெரிக்க வர்த்தகர்கள் வணிகம் மேற்கொள்ளக் கூடாது ஆகியன மேற்படி விதிக்கப்பட்ட புதிய தடைகளுள் உள்ளடங்கும். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியை மீறி பிரதமர் எவ்வாறு செயற்பட முடியும்

## வாசுதேவ காட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதியையும் மீறி பிரதமர் எவ்வாறு செயற்பட முடியும் என ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான வாசுதேவ நாண யக்கார கேள்வியெழுப்பினார்.



ஜனாதிபதியால் பிற்படுத்தப்பட்ட துறைமுக ஒப்பந்தத்தை பிரதமர் அவசரமாக கைச்சாத்திட்டதன் பின்னணியை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதியையும் மீறி பிரதமர் எவ்வாறு செயற்படமுடியும் என்பதையும் எமக்குத் தெரிவிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சோஷலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று முன் தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கையின் பின்னணியில் அர்ஜுன் அலோசியஸே உள்ளார்

## உதய கம்மன்பில கண்டுபிடிப்பு



அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கையின் பின்னணியில் பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜுன் அலோசியஸ் இருக்கின்றார் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

சீன மேர்சன்ட் நிறுவனத்துடன் அண்மையில் இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பின்னணியில் அலோசியஸ் செயற்படுவதாக உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.

சீன மேர்சன்ட் நிறுவனத்தை விடவும் இலாபமீட்டக் கூடிய நிறுவனங்கள் உடன்படிக்கை கைச்சாத்திட ஆய்த்தமாக இருந்த போதிலும், அரசாங்கம் சீன மேர்சன்ட் நிறுவனத்திற்கே அந்த சந்தர்ப்பத்தை வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

சீன மேர்சன்ட் நிறுவனம் 99 ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு 1888 மில்லியன் டொலர்களை வழங்க இணங்கியதாகவும் சீன ஹார்பர் நிறுவனம் 50 ஆண்டுகளில் 3281 மில்லியன் டொலர்களை வழங்க இணங்கியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்த உடன்படிக்கையின் பின்னணியில் அலோசியஸ் செயற்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளதாகவும் எதிர்காலத்தில் இது தொடர்பிலான சாட்சியங்கள் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மருத்துவக் கல்விக்கான தகுதிகள் தொடர்பான வர்த்தமானி வெளியீடு

## சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு

மருத்துவக் கல்விக்கான தகுதிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை, இரண்டு வாரங்களுக்குள் வெளியிட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.



"இங்குள்ள சிலர் தனியார் மருத்துவக் கல்வியை எதிர்க்கின்றனர். வெளிநாடுகளில் தனியார் மருத்துவ் கல்லூரி வளர்ச்சியடைந்துள்ளதுடன், எமது நாட்டின் பல வைத்தியர்கள் வெளி நாட்டில் கற்றவர்கள்.

அரசாங்கம் சப்ரகமுவ, வடமேல்மற்றும்மொரட்டுவை பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடத்தை நிறுவ திட்டமிட்டுள்ளதுடன், இரத்தின புரி வைத்தியசாலையையும் அபிவிருத்தி செய்யவுள்ளது.

அத்துடன் குளியாப்பிட்டிய ஆதார வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது" என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சாண்ட்விச் முறை

"ஒருவரிடம் ஓர் உதவி கோரி அணுகுகிறீர்கள். போய் அமர்ந்ததுமே இன்ன வேலையாக வந்தேன் என்று ஆரம்பித்து விடுவீர்களா? அல்லது வேறு எதற்கோ வந்த மாதிரி எல்லா விடயங்களையும் பேசி விட்டு பேச்சுவாக்கில் உதவி மனுவை முன் வைப்பீர்களா?" இப்படி என் நண்பர் ஒரு வரிடம் கேட்டேன்.

"நான் எப்போதும் முதல் பாணியைத் தான் பின்பற்றுவேன்" என்றார். தவறு! என்றேன்.

எப்போதும் இரண்டாவது பாணியைத் தான் பின்பற்ற வேண்டுமா? என்றார். "கூடாது" என்றேன்.

"ஏங்க இப்படிப் போட்டுக் குழப்புறீங்க? இரண்டுமே தவறென்றால் அப்புறம் என்ன தான் வழி?" என்றார் விழிகள் பிதுங்கி யபடி.

"சூழ்நிலைகளுக்குத் தகுந்தபடி முதல் பாணியையோ அல்லது இரண்டாவது பாணியையோ பின்பற்ற வேண்டுமே [illegible]ிர எல்லாச் சாமிக்கும் ஒரே பூசாரி என்கிற பாணியைப் பின்பற்றக் கூடாது" என்றேன்.

"கொஞ்சம் புரியும்படியாத்தான் சொல்றது?" என்றார்.

நாம் ஓர் உதவி குறித்து அணுகுகிறோம் என்றால் அது எப்படிப்பட்ட உதவி, யாரை அணுகுகிறோம் என்பதை வைத்து முடிவு செய்யப்பட வேண்டிய விடயம் இது.

கனமான உதவிகள் என்றால் போனவுடன் இன்ன வேலையாக வந்தேன் என்று ஆரம்பித்து பேசிவிட்டு ஊர், உலகப் பிரச்சினைகளை அலசிவிட்டு (சு[illegible]க்கமாகத்தான்) புறப்படும் போது மறுபடி உதவி கோரிச் சொல்ல வந்த விடயத்தை அழுத்தமாகச் சொல்லிவிட்டு புறப்பட்டு விடலாம்.

எளிய உதவிகள் என்றால் போதும் குசல விசாரிப்பு (பிரட்) இடையில் விண்ணப்ப மனு (வெள்ளரி, தக்காளி, வெண்ணெய்) அப்புறம் ஊர் உலகப் பிரச்சினைகள் (இப்போது மறுபடி பிரட்) என்று பேசிவிட்டு புறப்பட வேண்டும். வந்தது உதவி கேட்பதற்குத்தான் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் நடந்து கொள்ளும் முறை இது. அதாவது சாண்ட்விச் முறை.

நெருக்கமும் உரிமையும் இருந்து நன்கு பழகக்கூடியவர். கனமான விடயங்களைக் கூட மேற்கண்ட சாண்ட்விச் முறையில் சொன்னால் போதுமானது.

"இவருக்குச் செய்து தொலைக்க வேண்டியிருக்கிறதே, நம்மைப் போட்டு இப்படிப் படுத்துகிறாரே" என்றெல்லாம் உதவுபவர்களுக்குத் தோன்றிவிடக் கூடாது.

காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் வெற்றியே அணுகு முறையில்தான் அடங்கியிருக்கிறது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2009 வினாத்தாள் பகுதி-1

21. முரளி. ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்துக்கு வந்த அதே வேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை முரளிக்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?
   1) மோகன் 2) முரளி 3) ரவி

22. தந்தையார் மாம்பழத்தையும். அன்னாசிப்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம் பழத்தை விரும்புவதில்லை. தாயார் தோடம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்றபோதிலும் அன்னாசிப்பழத்தை விரும்புவதில்லை. நான் விளாம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்றேன். நாம் மூவரும் விரும்பும் பழம்.
   1) விளாம்பழம் 2) தோடம்பழம் 3) மாம்பழம்

23. தாயார் ஒருவர் தன்னிடத்தில் இருந்த பணத்தில் 1/2 ஐப் புத்தகங்கள் வாங்கச் செலவளித்தார். அதன் பின்னர் அவர் மீதிப்பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவளித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபாய் 50.00 எனின், அவர் புத்தகங்கள் வாங்கச் செலவளித்த பணம் எவ்வளவு?
   1) ரூபாய் 50.00 2) ரூபாய் 100.00 4) ரூபாய் 200.00

24. தற்போது கண்ணனின் வயது 12 ஆகும் அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். கண்ணனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இருமடங்காகும்.
   1) 6 2) 10 3) 24

25. 200 இன் அரைவாசியின் 1/4 உடன் 5 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?
   1) 25 2) 30 3) 35


26. 41 தொடக்கம் 45 வரையள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகள் யாது?
   1) 4 2) 5 3) 6

27. உருவில் உள்ள பொருட்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.




   1) வெட்டுதல். வரைதல். எழுதுதல்
   2) எழுதுதல். வெட்டுதல். அணிதல்
   3) வெட்டுதல். எழுதுதல். அணிதல்

28. உருவில் காணப்படும் உருளை வடிவமுள்ள ஒரு திண்மத்தை புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்



   1) செவ்வகம்
   2) வட்டம்
   3) முக்கோணம்

29. உருவில் காணப்படும் திண்மத்தை புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?




30. இரு மனிதர்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இருந்து எதிர்த்திசைகளில் செல்ல ஆரம்பித்து முதலில் 5 மீற்றர் வீதம் சென்று தமது வலக்கைப் பக்கத்திற்குத் திரும்பி மேலும் 5 மீற்றர் வீதம் சென்றனர். பின்னர் இருவரும் தமது வலக்கைப் பக்கத்திற்குத் திரும்பி மேலும் 5 மீற்றர் வீதம் சென்றனர். இப்போது அவர்கள் இருவரும் இருப்பது
   1) ஒருவரிலிருந்து மற்றவர் 5 மீற்றர் தூரத்தில்
   2) ஒருவரிலிருந்து மற்றவர் 10 மீற்றர் தூரத்தில்
   3) ஆரம்பித்த இடத்தில்

**28.07.2017, 02.08.2017 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 வினாக்களின் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. 2) | 11. 1) | 21. 2) | 31. 3) |
| 2. 1) | 12. 2) | 22. 3) | 32. 2) |
| 3. 2) | 13. 3) | 23. 2) | 33. 3) |
| 4. 3) | 14. 1) | 24. 1) | 34. 3) |
| 5. 2) | 15. 3) | 25. 2) | 35. 1) |
| 6. 2) | 16. 1).2).3) | 26. 3) | 36. 2) |
| 7. 3) | 17. 3) | 27. 3) | 37. 3) |
| 8. 2) | 18. 2) | 28. 1) | 38. 2) |
| 9. 3) | 19. 3) | 29. 1) | 39. 3) |
| 10. 2) | 20. 1) | 30. 2) | 40. 3) |


♦ A, B என்னும் இரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 10 கி.மீ அகும். ஒரு குறித்த நாளில் மு.ப 6.00 மணிக்கு முகுந்தன் A யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 3 km என்னும் வீதத்தில் B ஐ நோக்கிச் செல்கின்றார். மோகன் அதே நேரத்தில் B யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 2 கி.மீ என்னும் வீதத்தில் A ஐ நோக்கிச் செல்கின்றான்.




31. முகுந்தனும் மோகனும் சந்திப்பது A யிலிருந்து
   1) 3 km தூரத்தில் 2) 5 km தூரத்தில் 3) 6 km தூரத்தில்

32. முகுந்தனும் மோகனும் சந்திக்கும் போது நேரம் யாது?
   1) மு.ப. 7 .00 2) மு.ப. 8.00 3) மு.ப. 9.00

♦ சிறுபிள்ளைகள் சைக்கிள் ஓடுவதற்காக ஒரு விளையாட்டு மைதானத்தில் அமைக்கப் பட்டுள்ள சில பாதைகளைக் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1 cm ஆகும். 1 cm இனால் 10 m தூரம் காட்டப்படுகின்றது.




33. ஒரு பிள்ளை A யிலிருந்து ஆரம்பித்து K,L,B ஆகியவற்றைக் கடந்து C இற்குச் சென்று வலப்பக்கமாகத் திரும்பி முறையே E,L,F ஆகியவற்றைக் கடந்து D இற்கு வருகின்றது.அது சைக்கிள் ஓடும் தூரம் எத்தனை மீற்றர்?
   1) 210 2) 240 3) 280

34. ஒரு பிள்ளை I இலிருந்து ஆரம்பித்து K இனூடாக H இற்குச் சென்று இடப்பக்கமாகத் திரும்பி M இனூடாக F,E,C,B,J,D ஆகியவற்றைக் கடந்து மறுபடியும் I இற்கு வருகிறது. அது சைக்கிள் ஓடும் தூரம் எத்தனை மீற்றர்?
   1) 210 2) 240 3) 280

♦ பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A,D,E,F,H என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 1,2,3,4,5 என்னும் இலக்கங்கள் (இதே ஒழுங்கில் அன்றி) இடப்பட்டு அவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

HEAD = 1235
FEED = 1134

35. எழுத்து E இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
   1) 1 2) 3 3) 5

36. எழுத்து D இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
   1) 1 2) 3 3) 5

♦ நிமலன் கமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 60 kg எனவும் கமலன். அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளினது கூட்டுத் தொகை 64 kg எனவும் நிமலன். கமலன். அமலன் ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத் தொகை 98 kg எனவும் தரப்பட்டிருப்பின்

37. அமலனின் நிறை யாது?
   1) 30 kg 2) 34 kg 3) 38 kg

38. நிமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?
   1) 68 kg 2) 72 kg 3) 76 kg

♦ பின்வரும் விபரத்தைப் பயன்படுத்தி விடை எழுதுக.

எனது பெயர் சேகர். நான் வகுப்பு முடிவடைந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். வீதியின் பக்கத்தில் ஒரு பேருந்துத் தரிப்பிடத்தில் சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுடைய மகள் சுசிலா வகுப்பு முடிவடைந்து வரும் வரைக்கும் அங்கே காத்திருந்தனர். அவர்கள் என்னைக் காணவில்லை.அந்நேரத்தில் ஒரு பேருந்து. தரிப்பிடத்திற்கு அண்மையில் நிறுத்தப்பட்டது.அலுவலக வேலை முடிந்து வருபவர்கள் அப்பேருந்தில் நிறைந்திருந்தனர். தங்கை சுசீலா அப்பேரிந்திலிருந்து இறங்கி வந்தார்.

39. பின்வரும் கூற்றுக்களிடையே சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1) சேகர் தரம் ஐந்தில் கற்கும் மாணவன் எனக் கூறலாம்.
   2) சுசீலா தரம் நான்கில் கற்கும் மாணவி எனக் கூறலாம்.
   3) அவர்கள் இருவரும் கற்கும் தரங்கள் பற்றிக் கூறுவது கடினம்.

40. பின்வரும் கூற்றுக்களிடையே *பிழையான* கூற்றைத் தெரிவு செய்க.
   1) சேகரின் தந்தை சுசீலாவின் தந்தையின் தமையனாக இருக்கலாம்.
   2) சுசீலாவின் தாயார். சேகரின் தாயாரின் தங்கையாக இருக்கலாம்.
   3) சுசீலா வின் தாயார் சேகரின் தந்தையின் தங்கையாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2009 வினாத்தாள் பகுதி-2

1. பின்வரும் பந்தியை வாசிக்க

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத் தொடர்கள். இன்னிசை கீதங்கள் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவி. நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள். அவற்றில் பழுத்து மணம் பரப்பும் கனிகள். அக்காட்சிகளைப் பார்த்து கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்துகொண்டிருப்பேன்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

i) இங்கு கீதம் இசைத்து வருவது யாது? ..................................................
ii) இயற்கை என்ற சொல்லின் எதிர்க் கருத்துச் சொல் யாது?........................
iii) பழங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. ..........................
iv) மரம் என்ற சொல்லின் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக. ................
v) இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ........................................
vi) மேற்குறித்த விபரம் எத்தகைய இடம் பற்றியது. ..................................

2. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

i) ஒளியைப் பரப்புவது ............................ (விளக்கு, விலக்கு)
ii) மாணவர் தமது .....................களைச் சிறப்பாகச் செய்தனர் ( பனி, பணி)

3. i) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.
பறவைகள் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளன. ..............................................
ii) பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.
நட்சத்திரம் வானில் மின்னுகிறது. ...........................................................

4. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

i) நட்டாற்றில் விடல் ...............................................................................
ii) கண்ணும் கருத்துமாயிருத்தல் ...............................................................

5. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

i) தன் நாட்டை நேசிப்பவன் ....................................................................
ii) தன்னுடைய நன்மைக்காக மாத்திரம் செயற்படுபவன் ..........................
iii) மனிதர்களை ஆற்றின் அக்கரைக்குக் கொண்டுசெல்பவன் ....................

6. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

i) ஐயோ முதலாளி அகப்பட்டாரா
ii) நண்பனே கோபிக்க வேண்டாம்

7. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

குளம்/ஆகியவற்றில்/கழிவுகளை/ஆறு/மாசு/இடும்போது/குட்டை/அடையும்/நீர்வளம்
...........................................................................................................

8. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

i) உண்ணாச் சொத்து மண்ணாய்ப்போகும்
...........................................................................................................
ii) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
...........................................................................................................

9. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

i) காலை ........................ ii) மாலை ....................................
iii) இரவு ........................

10. கருத்தைத் தமிழில் எழுதுக.

i) Be careful : ............................
ii) What is this : ....................................
iii) I am drinking water : ...................................

11.பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தை தமிழில்எழுதுக.

i) மெய மகே புட்( )டுவ : ...........................................................
ii) கிரி சுது பாட்ட : ...........................................................

12. பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ

1) நந்தியாவட்டை 2) குவளை 3) பவளமல்லிகை 4) அந்தி மந்தாரை

13. இரவில் திரியும் பறவையாக அமையாதது

1) கோட்டான் 2) சாக்குருவி 3) இரட்டைச் சொண்டுக்குருவி 4) ஆந்தை

14. பழச்செய்கைக்கு பெரும்மாலும் தீங்கு விளைவிக்கும் பிராணி

1) கரப்பான் 2) வெண்மூட்டுப் பூச்சி 3) மயிர்க்கொட்டி 4) சிலந்தி

15. தொலைவில் உள்ள இரையைக் கண்டு அதனைப் பிடிக்கும் ஆற்றல் கூடுதலாக உள்ள பறவை

1) கொக்கு 2) பருந்து 3) கழுகு 4) மழைக்குருவி

16. பயிர்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாற்று முறைகளில் அனுகூலமாக அமையாதது

1) எளிதாகப் பராமரிக்கத்தக்கதாக இருத்தல்.
2) வெயில், மழை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கத்தக்கதாக இருத்தல்.
3) தேவைப்படும்போது அங்கும் இங்கும் மாற்றக்கூடியதாக இருத்தல்.
4) இடவசதி உள்ள இடத்தில் மாத்திரம் பயிரிடக்கூடியதாக இருத்தல்.

17. வீட்டுத்தோட்டத்தில் பயிர்ச்செய்கைக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் வருவதைத் தடுப்பதற்கு வளர்க்கப்படும் தாவரம்

1) துளசி 2) நாயுண்ணி 3) காவட்டம் புல் 4) செவ்வந்தி

18. உடல் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் உணவுச்சோடி

1) பசும்பாலும் தோடம்பழச்சாறும் 2) முட்டையும் குரக்கன் ரொட்டியும்
3) பயறும் சோயா அவரையும் 4) சோயா அவரையும் பசளியும்

19. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலை வகையாக அமையாதது

1) வல்லாரை 2) சிறுநரத்தை இலை 3) கோப்பை இலை 4) வட்டுக்கத்தரி இலை

20. பிளாத்திக்குக் கோப்பையில் அடைக்கப்பட்ட யோக்கட்டை உண்பதற்கு முன்பாக விசேடமாகக் கவனத்தில் கொள்ளவேண்டியது

1) அடைக்கப்பட்ட தேதி 2) காலாவதியாகும் தேதி
3) அடங்கும் பொருள் 4) தர நிர்ணய இலட்சினை

21. சோறு சமைப்பதற்காக அரிசியைக் களைவதற்கு மிகப்பொருத்தமான பாத்திரம்

1) மட்கோப்பை 2) பானை 3) அரிக்குஞ்சட்டி 4) பெரிய மட்பானை

22. 

இக்குறியீடு குறிப்பது

1) கர்ப்பிணித்தாயை 2) வலது குறைந்தவரை
3) வயது வந்தவரை 4) பிள்ளையை

23. அரசாங்க நிர்வாகங்களினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான தகவலை அறிவதற்குத் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்

1) 118 2) 119 3) 1231 4) 1919

24. இந்நாட்டினுள்ளே பதிவுத் தபாலின் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு குறைந்த பட்சம் எவ்வளவு பெறுமானம் உள்ள முத்திரை தேவைப்படும்?

1) ரூ. 20.00 2) ரூ. 25.00 3) ரூ. 30.00 4) ரூ. 35.00

25. வயலின் ஒரு பகுதியில் இருந்து வேறொரு பகுதிக்குத் தண்ணீர் செல்வதற்கு வரம்பில் வெட்டப்பட்டிருக்கும் பாதை

1) மடைக்கதவு 2) கலிங்கற்தொட்டி 3) வாய்க்கால் 4) நீரோடை

26. இலங்கையின் உயர்ந்த நிலத்தையும் தாழ்ந்த நிலத்தையும் காட்டும் படத்தில் உயர்ந்த நிலம் தீட்டப்பட்டிருக்கும் நிறம்

1) நீல நிறம் 2) கபில நிறம் 3) சிவப்பு நிறம் 4) பச்சை நிறம்

27. இலங்கையில் ஒரே மாகாணத்தில் இருந்து இரு பிரதான ஆறுகள் கடலுக்குள்ளே பாய்கின்றன. அவை

1) மகாவலிகங்கை, வளவ கங்கை 2) வளவ கங்கை, களனி கங்கை
3) களனி கங்கை, களு கங்கை 4) கிங்கங்கை, களுகங்கை

28. இலங்கை அரசாங்க இலட்சினையில் நிலைத்திருப்பைக் குறிப்பது

1) தர்மச் சக்கரம் 2) நிறைகுடம் 3) பூவிதழ்கள் 4) சூரியனும் சந்திரனும்

29. இலங்கையில் முதன்முதலில் அமைக்கப்பட்ட குளம்

1) திஸாவாவி 2) கிரிந்தலைக்குளம் 3) பசவக்குளம் 4) வவுனிக்குளம்

30. இலங்கைக்கு உன்னத சேவையை ஆற்றியவரும், இப்படத்தில் காணப்படுபவருமான பெரியார் யார்?



1) சேர் டீ.பீ. ஜயதிலக
2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
3) சேர் பொன்னம்பலம் இராமநாதன்
4) கலாநிதி ரீ.பி. ஜாயா


31. மின்னல் தாக்கத்தக்க சாத்தியம் கூடுதலாக இருப்பது

1) வாகனத்தில் செல்லும்போது
2) திறந்த மைதானத்தில் நிற்கும்போது
3) பலகையிடப்பட்ட தரையில் நிற்கும்போது
4) தார் வீதியில் செல்லும்போது

32. நாய் கடித்தால் முதலில் செய்ய வேண்டியது


1) கடித்த இடத்தில் துணியினால் கட்டுதல்
2) கடித்த இடத்தை சவர்க்காரமிட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்
3) கடித்த இடத்தில் மருந்து பூசுதல்
4) நோயாளியை மருத்துவரிடம் கொண்டுசெல்லுதல்

33. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் நான்காம் கட்டத்தைக் காட்டும் உரு யாது?




1) 2) 3) 4)

34. இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளவாறு வீட்டு முற்றத்தில் சதுரங்கள் வரையப்பட்டு விளையாடப்படும் விளையாட்டு



1) சடுகுடு 2) சில்லுக்கோடு
3) உப்புக்காவுதல் 4) கிட்டியடித்தல்

35. புல்லாங்குழல் துளைகள் சரியாகக் காணப்படும் உரு யாது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கும்

## பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான ஆதாரங்கள் நிரூபிக்கப்படாது போனால், அதனை ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் தோற்கடிக்கும் என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக முறையான விசாரணைகள் நடத்தப்படும். இடம்பெற்ற சம்பவத்துக்காக அமைச்சர் விரைவில் விளக்கமளிக்கவுள்ளார்.

அதனடிப்படையில் ஆதாரங்கள் நிரூபிக்கப்படாத பட்சத்தில் கட்சி என்ற ரீதியில் நாம் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடிப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதைப் பற்றி செய்திகள் வெளியாகியுள்ளன. இது குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# விஜயதாஸவை மாற்றுமாறு ஜனாதிபதி, பிரதமருக்கு அழுத்தம்



நீதி மற்றும் பௌத்த மத விவகார அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவை அவ்வமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிவிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பிரபல அமைச்சர் ஒருவர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கத் தவறின் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று எதிர்வரும் நாட்களில் முக்கிய தீர்மானம் எடுக்க வேண்டி வரும் என அவர் குறிப்பிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அந்த அமைச்சின் கீழ் உள்ள சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு முன்வைக்கப்பட்ட இலஞ்ச, ஊழல் ஆவணங்கள் தொடர்பில் நீண்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதும், இந்த வேண்டுகோளை முன் வைப்பதற்கு பிரதான காரணம் எனவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (இ-7)

# விபத்தில் அதிசொகுசு பஸ் தீக்கிரை





(கொழும்பு)

கண்டி- கொழும்பு பிரதான வீதியில் கேகாலை, பல்லபான பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் அதிசொகுசு பஸ் தீப்பிடித்துள்ளது.

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி சென்று கொண்டிருந்த அதிசொகுசு பஸ் இவ்வாறு தீப்பிடித்து எரிந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதிய பஸ் நேற்று முன்தினம் இரவு தீப்பிடித்துள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் இரத்தினபுரி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட பிரதேச செயலக பிரிவு உட்பட 9 கிராம சேவகர் பிரிவுகளுக்கும், மாத்தறை மாவட்டத்தில் பஸ்கொடை பிரதேச செயலக பிரிவுக்கும் மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மழைவீழ்ச்சி 100 மி.மீ அளவில் காணப்படுவதாகவும் மழை தொடர்ந்து நீடிக்குமாயின் மண்சரிவு, பூமிய திர்வு, கல் சரிதல் போன்ற அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் மக்கள் அவதானமாக இருக்குமாறும், தேவை ஏற்படின் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல தயாராக இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1150

Search for people, places and things | Nagendram Home

### காவேரி


பெண் ஒருத்தி கடவுளிடம் உலகில் உள்ள எல்லா பெண்களைவிட அழகாக வரம் கேட்க அவளை ஆணாய் மாற்றினார் கடவுள்...



பெண்களை விட ஆண்கள் அழகென்பதால்...

### சுரேஸ்

பெண்கள் இயக்கும் போது



ஆண்கள் சமைக்கும் போது



### நந்து




### கஜனா

ஒருத்தன் நடுராத்திரி ஒரு மணிக்கு சுடு காட்டுக்குப் போய் அங்குள்ள கிணற்றில் தண்ணீர் இறைத்து குளிக்கிறான்... ஏன்?



ஏன்னா... அவன்கிட்ட ஹமாம் சோப் இருந்தது. ஹமாம் இருக்க பயமேன்...!

### மிதுனா

தரகரே! பொண்ணு கறுப்பாயிருந்தாலும் சிவப்பாயிருந்தாலும் பரவாயில்லை ஆனா பொண்ணு கண்டிப்பா ஸ்மார்ட் போன் வைச்சிருக்கனும்.

தரகர்: ஏன் சேர்?

ஏன்னா ஸ்மார்ட் போன் வைச்சிருக்கிற பொண்ணுதான் குனிஞ்ச தலை நிமிராம போகும்!

### மகிந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)





## பதினொன்றில் ராகு வருகிறது! பணவரவை இனித் தருகிறது!




(பெயரின் முதல் எழுத்துக்கள்: ப,பி,பு,பூ, ஷ,ண,ட,பே,போ உள்ளவர்களுக்கும்)

**நம்பியவர்களுக்கு கைகொடுத்து உதவும் நல்ல உள்ளம் படைத்த கன்னி இராசி நேயர்களே!**

இராகு-கேது பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை 12ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான் ஜுலை 27ஆம் திகதி முதல் லாப ஸ்தானத்திற்கு செல்கிறார். 6இல் சஞ்சரித்து வந்த கேது பகவான், புத்திர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம் எனப் படும் 5ஆம் இடத்திற்கு செல்கிறார். மேலும் இதுவரை ஜென்ம இராசியில் சஞ்சரித்து சிக்கல்களையும், சிரமங்களையும் கொடுத்த குரு, செப்டெம்பர் 2ஆம் திகதி உங்கள் இராசியை விட்டு விலகி 2ஆம் இடத்திற்கு வரப்போகிறார்.

வாக்கு, தனம், குடும்பம் என 2ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அந்த இடம் புனிதமடைகிறது. எனவே பல நல்ல பலன்கள் வந்து சேரப் போகிறது. குருவின் பார்வை 6, 8,10 ஆகிய இடங்களில் பதிகின்றது. இதுவரை தொழில் அமையாதவர்களுக்கு தொழில் அமையும்.

இராகு-கேது பெயர்ச்சியும், குருப் பெயர்ச்சியும் உங்களுக்கு நன்மை செய்யும் என்றாலும், அதற்கு பிறகு வரும் சனிப் பெயர்ச்சி சஞ்சலங்களை வழங்கலாம். காரணம் அர்த்தாஷ்டம சனியாக வருகின்றது.

எனவே அதற்குரிய பரிகாரங்களை முன்னதாகவே செய்து கொள்வதோடு கன்னி இராசியை விட்டு குரு விலகப் போவதால் அதற்குரிய பரிகாரங்களையும், லாப ஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதால் தனவரவு பெருகவும், தொழில் முன்னேற்றம் காணவும், கேதுவால் சுபகாரியத் தடை அகலவும், அதற்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களையும், முறையாக மேற்கொள்வது நல்லது.

**வருமானத்தை இருமடங்காக்கும் லாப ஸ்தான இராகு!**

உங்கள் இராசிக்கு 12ஆம் இடமான விரய ஸ்தானத்தில் கடந்த ஒன்றரை வருடமாக இராகு பகவான் சஞ்சரித்து வந்தார். அதனால் பல இன்னல்களும், தடைகளும் ஏற்பட்டிருக்கலாம். இனி அந்த நிலை அடியோடு மாறப்போகிறது. செல்வ நிலையில் உயர்வும், செயற்பாடுகளில் வெற்றியும் இந்த இராகு-கேது பெயர்ச்சியால் கிடைக்கப் போகின்றது.

லாபத்தில் இராகு நிற்க நன்மை உண்டாம்
நாடிவரும்தொழில்வளர்ச்சிகூடும்உண்மை.
சேமிப்பும் அதிகரிக்கும் திறமை வெல்லும்
தேசத்தில் புகழ்பரவும் செல்வம் சேரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, லாப இராகு நன்மையைச் செய்யும் என்பார்கள்.

சோகங்களை மாற்றி சுகங்களைக் கூட்டும். நாகநாதர் வழிபாட்டை மேற்கொள்ளும் பொழுது, நன்மைகளை மேலும் உங்களுக்கு வரவழைத்துக் கொடுப்பார்.

வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட சரிவை நீக்க புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிக்கு வங்கிகளின் மூலம் சலுகைகளைப் பெற வாய்ப்பு கைகூடிவரும். வாடகை இடத்தில் நடைபெறும் தொழில் நிலையத்தை சொந்த இடத்தில் நடத்துவது பற்றிச் சிந்திப்பீர்கள். முன்னோர் வழிச் சொத்துகளிலும் முறையான பங்கீடு கிடைக்கும். படித்து முடித்து வேலை தேடிக் கொண்டிருப்பவர்கள் இனி வேலைக்குச் செல்லாமல் சுயதொழில் செய்யலாமா? என்று சிந்திக்கத் தொடங்குவர்.

வெளிநாட்டிலிருந்து ஒரு சிலருக்கு அழைப்புவரும். மூத்த சகோதரத்தால் ஒருசிலருக்கு ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் விலகும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். பெரிய மனிதர்களின் நட்பால் யோகம் வந்து சேரும். உணவு முறையில் கட்டுப்பாடு அவசியம். மகன் வழியில் வெளிநாட்டு படிப்பு, மகள்வழியில் திருமணம் என்று மனதில் நினைத்திருந்ததெல்லாம் வெற்றிகரமாக நடைபெறப் போகிறது.

இராஜாங்க அனுகூலம் உண்டு. அதிகார பதவியில் உள்ளவர்களிடம் சிநேகிதத்தால் எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். அதில் வெற்றியும் காண்பீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உங்களுக்கு வந்து சேரும்.

**பஞ்சம ஸ்தான கேதுவின் பலன்!**

இதுவரை உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் இப்பொழுது பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். இதன்விளைவாக நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறப் போகிறது. புதிய தொழில் வர்த்தகம் செய்ய முற்படுபவர்களுக்கு இது ஏற்ற காலம். தங்கம், வெள்ளி தடையின்றி வந்து சேரும். குழந்தைகளின் கல்யாணச் சீர்வரிசைகளை வாங்கி சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வரன்கள் வாயிலை நோக்கி வந்து சேரும். பூர்வீக சொத்துகளில் பல முறை பஞ்சாயத்துகள் வைத்தும், அண்ணன், தம்பிகள் அரவணைப்பு குறைவால் எண்ணியபடி காரியம் எளிதில் நடைபெறவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது நல்ல பலன்கள் நாடிவரப் போகிறது. பூர்வ புண்ணியத்து வலிமை உங்களுக்கு அதிகம் இருப்பதால் புண்ணிய ஸ்தலங்களை உங்கள் முன்னோர் கட்டி வைத்திருக்கலாம். அந்த ஸ்தலங்கள் சிதலமடைந்தோ, பராமரிப்பின்றியோ இருந்திருக்கலாம். அவற்றையெல்லாம் பராமரித்துப் பார்க்கும் பொருட்டு உங்களுக்கு எண்ணம் உருவாகும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். வருமானம் உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும். குரு பார்வையும் உங்களுக்கு கைகொடுத்து உதவப் போகின்றது.

ஞான மார்க்கத்தில் ஆர்வம், சாஸ்திர விடயங்களைப் பற்றுதல், ஆன்மீகக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் அமைப்பு, ஆலயத் திருப்பணிகளை முன்னின்று நடத்தும் வாய்ப்பு என்று அழைப்புகள் உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும். புத்திர ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. படிப்பிற்காக வெளியூரில் தங்கிப் படித்தாலும், தொலைபேசி வாயிலாக அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்வது நல்லது. பாட்டனார் வழிச் சொத்து உங்களுக்கு கிடைக்கலாம். குலதெய்வ வழிபாடு உங்கள் குடும்ப முன்னேற்றத்தை உயர்த்தும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு குடும்ப வாழ்க்கை திருப்திகரமாக இருக்கும். ஒற்றுமை பலப்படும். சுபகாரியங்கள் திட்டமிட்படியே நடைபெறும். கணவன்-மனைவி, குழந்தைகள் என்று அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்து சம்பாத்தியம் பலமடங்காக உயரும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். குழந்தைகளின் முன்னேற்றம் பாராட்டத்தக்கதாக அமையும். உடன்பிறப்புகளின் பகை மாறும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்பு கூட உருவாகும். மங்கல நிகழ்ச்சிகளை நடத்துவதில் இருந்த தடைகள் அகலும். ஆரோக்கியம் சீராகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இராகு-கேதுக்களை திருப்திப்படுத்தி நாகசாந்திப் பரிகாரங்களை செய்தால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

11ஆம் இடத்து ராகுவால் பணவரவு திருப்திகரமாக இருக்கவும், தொழில் வளம் பெருகவும், பஞ்சம ஸ்தான கேதுவால் பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கவும், புதன்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இராகு-கேதுக்களுக்குரிய தான்ய தானம் கொடுத்து, அபிஷேக ஆராதனைகள் செய்தால் இக்காலம் இனிய காலமாக அமையும்.

**பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!**

புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 3.4.2018 வரை) இக்காலத்தில் புதிய நபர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும். மதிப்பு மிக்கவர்கள் உங்கள் மனை தேடிவந்து உதவுவர். இராசிநாதனாகவும், 10இற்கு அதிபதியாகவும் புதன் விளங்குதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். போராடும் நிலை மாறும். புகழ் மேலோங்கும். மருமகன், மைத்துனர்கள் உங்கள் மனதிற்குப் பிடித்த விதம் நடந்து கொள்வர்.

சனி சாரத்தில இராகு சஞ்சரிக்கும் பெர்ழுது (4.4.2018 முதல் 11.12.2018 வரை) இக்காலத்தில் பிள்ளைகளின் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். பிரச்சினைகள் அடுத்தடுத்து வந்தாலும் அதைச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும். மழலை பாக்கியம் இல்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது செய்யும் பரிகாரங்கள் மூலம் பலன்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் உண்டாகும்.

குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (12.12.2018 முதல் 12.2.2019 வரை) இக்காலத்தில் மனக்குழப்பம் அகலும். இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி தரும். தொழில் கூட்டாளிகளிடம் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. சொத்து சம்பந்தமாக பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். வீண்பழிகள் விலக விழிப்புணர்ச்சி அதிகம் தேவைப்படும் நேரமிது.

**பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!**

செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 29.11.2017 வரை) இக்காலத்தில் பிரச்சினைகள் கூடும். பெற்றோர் வழியிலும், உற்றார், உறவினர் வகையிலும் பகை வளராமல் பார்த்துக் கொள்வது நல்லது. புதிய கூட்டாளிகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். வீண் விவகாரங்கள் வீடு தேடி வரலாம். கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரமிது. வாங்கிய சொத்துகளை ஒரு சிலருக்கு விற்க நேரிடும்.

சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (30.11.2017 முதல் 7.8.2018 வரை) இக்காலத்தில் தாய்வழி உறவினர்களின் தொடர்பால் தனவரவு உண்டாகும். வீடு, மனை வாங்க, தீட்டிய திட்டங்கள் நிறைவேறும். கடல் சார்ந்த வணிகம் செய்பவர்களுக்கு கணிசமான தொகை கைக்கு வந்து சேரும். சகோதர ஒற்றுமை பலப்படும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது (8.8.2018 முதல் 12.2.2019 வரை) இக்காலத்தில் விரயங்கள் அதிகரிக்கும். வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடியிருக்கும் வீட்டை ஒருசிலர் மாற்றிக் கொள்ள நினைப்பர். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். தந்தை வழி விரோதங்களால் மனக்கவலை அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றம் கருதி சுபச்செலவுகளை மேற்கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்களுக்குப் பிணை

பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்க தலைவர் உள்ளிட்ட 16 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள னர்.

ஆர்ப்பாட்ட நடவடிக்கையின் போது ஏற்பட்ட குழப்ப நிலையைத் தொடர்ந்து, கடந்த 26ஆம் திகதி கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்க தலைவர் உள்ளிட்ட 16 பேரையும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரியப்படுத்தப்பட்டது.

எனினும், அவர்கள் அதனை செய்யத் தவறியமையால், நீதிமன்றம் இவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய, குறித்த 16 பேரும் நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில், பிணை வழங்குமாறு கோரினர்.

இதனை கருத்தில்கொண்ட கொழும்பு மேலதிக நீதவான், சந்தேக நபர்களை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-7)

## "முகப்புத்தக ப்ரெண்ட்ஸ்" களியாட்டம்

"முகப்புத்தக ப்ரெண்ட்ஸ்" என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு குழுவினர் புவக்பிட்டிய பகுதியில் இரு நாட்களாக இரவு வேளைகளில் நடத்திய களியாட்ட நிகழ்ச்சியால் பலர் போதையில் சுயநினைவிழந்து கிடந்துள்ளனர். இதனால் குறித்த நிகழ்வில் ஏற்பாட்டாளர் போதைப் பொருள் தடுப்பு பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இக்களியாட்ட நிகழ்வில் ஈடுபட்ட இப்பிரிவினர் போதையில் சுயநினைவிழந்த நிலையில் காணப்பட்டதாகவும் போதைப் பிரியர்களிடம் சமூகத்தில் பரவலாக பயன்படுத்தப்படும் குளிசை வகைகள் இதன்போது பயன்படுத்தப்பட்டிருக்கலாமெனவும் போதை தரக்கூடிய பல வெளிநாட்டு உயர்தர மதுபான வகைகள் இங்கு கைப்பற்றப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)



கேலிச்சித்திரம்

# தவறு செய்வோருக்கு இலங்கையில் இடமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தவறு செய்வோருக்கு இந்த நாட்டில் இடமில்லை என்றும், பௌத்த புண்ணிய பூமியான இந்த நாட்டில் நியாயமான சமூகத்தை நோக்கி பயணிப்பவர்கள் மாத்திரமே நிலைத்திருக்க முடியும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹிக்குராங்கொட வலயக்கல்வி அலுவலகத்தின் புதிய கட்டட திறப்பு விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'குடும்ப ஆதிக்கத்தை நிலைநாட்டி ஆட்சி அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தனர்.

தற்போது 113 ஆசனங்களை பெற்று நாடாளுமன்றத்தில் அதிகாரத்தை நிரூபிக்க முயற்சிக்கின்றனர். நாடாளுமன்றத்தில் தலைகளின் எண்ணிக்கையை மாற்றி ஆட்சியை கைப்பற்றுவதற்கு கனவு கண்டாலும் அதற்கு எனது விருப்பத்தையும் ஆசீர்வாதத்தையும்பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கான தடைகளை அகற்றியே தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

வெற்று கோஷமிடுபவர்கள் நாட்டில் பல்வேறு குழப்ப நிலையை ஏற்படுத்துகின்றனர். அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்களை திசை திருப்புவதே இவர்களின் நோக்கமாக உள்ளது. இந்த நாட்டில் நியாயமான சமூகத்தை நோக்கி பயணிப்பவர்கள் மாத்திரமே நிலைத்திருக்க முடியும்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாரிய அச்சுறுத்தல்

## திஸ்ஸ விதாரண அச்சம்



(கொழும்பு)

தனியார் துறைக்கு வழங்குவதைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாத துறைமுகத்தை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கியிருப்பது பாரிய அச்சுறுத்தலாகும் என லங்கா சமசமாஜ கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## கிரவல் அகழ்வை எதிர்த்து ஆர்ப்பாட்டம்



புத்தளம் மாவட்டத்தின் மாதம்பை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மெதகம கொட்டகந்த மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் இடம்பெறும் கிரவல் அகழ்விற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. மெதகம முற்சந்தியில், வீதியை மறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மக்கள் இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (இ-7)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6656 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 64 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6841 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 35 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6657 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்<br>தொ.இ: G/6842 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 18 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HND in English/ அரசதொழில்<br>தொ.இ: B/6659 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 53 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/தாதி<br>தொ.இ: G/6852 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HND, ACCA லண்டன் PR<br>தொ.இ: B/6660 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 58 செவ் 7 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: NDT/ பொறியியலாளர்<br>தொ.இ: G/6858 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை சபையை நடத்தியதாக எம்.பிக்களுக்கு எதிராக முறைப்பாடு

ஒன்றிணைந்த எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிகளுக்கு எதிராக, ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் முறையிடுவதற்கு, அரசாங்கத்தரப்பு முக்கியஸ்தர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர், சபைக்குள் அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட, ஒன்றிணைந்த எதிரணியின் உறுப்பினர்களுக்கு எதிராகவே, இவ்வாறு முறைப்பாடுசெய்யப்படவுள்ளது.

கடந்த 28ஆம் திகதியன்று, சபையில் ஏற்பட்ட கூச்சல் குழப்பம் காரணமாக, சபை நடவடிக்கைகள் ஓகஸ்ட் 4ஆம் திகதி வரையிலும், சபாநாயகர் கருஜயசூரியவால் ஒத்திவைக்கப்பட்டன.

எரிபொருள் விநியோகத்தை, அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி, ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மீதான வாக்கெடுப்பு, அன்றையதினம் மாலை நடத்தப்படவிருந்தது. இந்நிலையிலேயே, சபையை கொண்டு செல்லமுடியாத வகையில், சபைக்குள் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிக்காட்டியமையால், சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த எம்.பிக்கள், நகைச்சுவையான சபையமர்வை அன்றையதினம் நடத்தியுள்ளனர்.

அதிலோர் உறுப்பினர், உறுப்பினர்களைச் சபைக்குள் அழைப்பதற்கான மணியோசை எழுப்பியுள்ளார். மற்றோர் உறுப்பினர் சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்துள்ளார். இன்னும் இரண்டொரு உறுப்பினர்கள், அரசாங்கத்தை விமர்சித்து உரையாற்றியுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் மற்றுமொரு உறுப்பினர் அமர்ந்ததையடுத்து, ஏனைய உறுப்பினர்கள் கைகளை தட்டி, ஆரவாரம் செய்துள்ளனர் என்றும் அறிய முடிகிறது.

இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், அவ்வாறு நடந்து கொண்ட உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றுமே, அரசாங்க தரப்பு முக்கியஸ்தர்கள் கோரிக்கை விடவுள்ளதாக அந்த தகவல் தெரிவித்துள்ளது. (இ-7)

# உமாஓயா திட்டத்தின் எதிர்காலம் நோர்வே நிபுணர்களின் கையில்!



நோர்வேயின் விசேட நிபுணர்களின் ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையில் உமாஓயா திட்டம் தொடரபான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உமாஓயா குறித்த மேற்பார்வை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது அவர் இதனைக் கூறியுள்ளார்.

உமாஓயா திட்டத்துக்கு பாரிய எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றது. மக்கள் போராட்டங்களை முன்னெடுத்ததுடன், எதிர்க்கட்சியினரும் அரசியல் ரீதியிலான எதிர்ப்புக்களை வெளியிட்டு வந்தனர்.

இதையடுத்து, உமா ஓயா திட்டத்தின் அகழ்வுப் பணிகள் இடை நிறுத்தப்பட்டு, நோர்வேயின் விசேட நிபுணர்களைக் கொண்டு ஆய்வு நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், இலங்கை வந்துள்ள விசேட நிபுணர் வழங்கும் அறிக்கையின் அடிப்படையில், உமா ஓயா திட்டத்தை தொடர்வதா? அல்லது இடைநிறுத்துவதா? என்று தீர்மானிக்கப்படும் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டிற்கு பாதகமாக செயற்படும் அரசியல்வாதிகளை தோற்கடிக்க பௌத்த பிக்குகள் முன் நிற்பார்கள்



நாட்டுக்கு பாதகமாக செயற்படும் அரசியல்வாதிகளை தோற்கடிப்பதற்கு பௌத்த பிக்குகள் முன் நிற்பார்கள் என தாய்நாட்டை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் முரத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்து ள்ளார்.

புஞ்சிபொறளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய வளங்களை விற்பனை செய்து நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அடுத்த தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும்.

ஊர் பாடசாலைகளுக்கு மக்களை வரவழைத்து நாட்டுக்கு எதிராக செயற்படும் அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என பௌத்த பிக்குகள் கோரிக்கை விடுப்பார்கள்.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. தேசிய சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதனை தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே இவ்வாறான அரசியல்வாதிகளுக்கு எதி ராக நடவடிக்கை எடுக்கப் படும் என முரத்தட்டுவே ஆனந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அதே இலக்கத்தில் புதிய சிம்; அலோஸியஸின் கோரிக்கையை நிராகரித்தது ஆணைக்குழு

தாம் கையளித்துள்ள கைத்தொலைபேசி இலக்கத்தில்மற்றுமொருசிம்அட்டையை பெற்றுக்கொள்ள அர் ஜுன் அலோஸியஸ் முன் வைத்த கோரிக்கையை ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

தாம் கையளித்துள்ள கைத்தொலைபேசி இலக்கத்தில் மற்றுமொரு சிம் அட்டையை பெற்றுக் கொள்வதற்காக நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆணை க்குழு விசாரணைகளின் போது தமது சட்டத்தரணி ஊடாக அர்ஜுன் அலோஸியஸ் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

எனினும், அவரது கோரிக்கையை ஆணைக்குழு நிராகரித்துள்ளது. முன்னதாக தமது கைத்தொலை பேசியின் கடவுச் சொல்லை வழங்குமாறு அலோஸியஸிடம் ஆணைக்குழு கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், குறித்த கடவுச் சொல்லை தாம் மறந்து விட்டதாக தமது சட்டத்தரணி ஊடாக அர் ஜுன் அலோஸியஸ் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தார்.

அவர்தமதுகடவுச்சொல்லை வழங்கியிருந்தால் 48 மணி நேரத்துக்குள் கைத்தொலைபேசியை அவரிடம் மீள வழங்கியிருக்கலாம் என ஆணைக்குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவர் அதற்கு மறுப்பு தெரிவித்ததால் அவர் விடுத்த கோரிக்கையை ஆணைக்குழு நிராகரித்துள்ளதாக அறிய முடிகின்றது. (இ-7)

# டெங்கு நோயாளர்களில் 30 வீதமானோர் சிறுவர்கள்

(கொழும்பு)

30 வீதமான டெங்கு நோயாளிகள் சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. சுமார் 5 முதல் 19 வயதுடையவர்களே இவ்வாறு டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இலங்கையில் டெங்கு நோயாளிகள் எண்ணிக்கை மேலும்மேலும் உயர்வடைந்து செல்வதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜுலை 28 திகதி வரையில் இவ்வாறு ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 372 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த ஆண்டில் டெங்கு நோயினால் இது வரையில் 301 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழிலுள்ள இராணுவம்,பொலிஸாரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையாம்

## உதய கம்மன்பில கவலை

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளதாகவும் இங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோரின் உயிருக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



படையினரின் உயிருக்கு உத்தரவாதம் அளிப்பது அரசின் பொறுப்பாகும் என்றும் ஆனால், இதை அரசு கண்டுகொள்ளாமல் இருக்கின்றது எனவும் கூறியுள்ளார்.

மகிந்தவின் ஆட்சியில் யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இராணுவத்தினரும், பொலிஸாரும் தங்கள் கடமைகளை அச்சுறுத்தல் இல்லாமல் செய்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால், மைத்திரி - ரணில் ஆட்சியில் எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் வாள் வெட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. இது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

தற்போது பொலிஸ் அதிகாரிகளையே தாக்கி வெட்டுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. எனவே, யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டும்.

இங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ள படையினர், பொலிஸார் ஆகியோரின் உயிருக்கு அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவங்களுடம் முன்னாள் போராளிகள் சம்பந்தப்பட்டுள்ளார்களா? என்பது தொடர்பில் தீவிர விசாரணைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

புனர்வாழ்வு பெறாத முன்னாள் போராளிகள் இவ்வாறான செயல்களில் ஈடுபடக்கூடும். இது தொடர்பில் அரசு உடன் கவனம் செலுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 | 60 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 350 | 400 | 320 |
| தக்காளி | 160 | 200 | 100 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 120 | 70 | 80 | 70 |
| கோவா | 140 | 160 | 60 | 100 | 160 |
| கரட் | 160 | 200 | 150 | 200 | 240 |
| பூசணி | 50 | 100 | 50 | 80 | 100 |
| புடோல் | 60 | 100 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 150 | 150 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 130 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 50 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 160 | 200 | 150 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 80 | 120 | 150 |
| போஞ்சி | 160 | 200 | 150 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 60 | 25 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 65 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 | 300 |
| வெங்காயப்பூ | 180 | 200 | — | 180 | 150 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 |
| [illegible] | 100 | 60 | 50 | - | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்?
~ *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எந்தக் குற்றச் செயல் நடந்தாலும் முன்னாள் போராளிகளைச் சாட்டுவது...

வன்னி யுத்தத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றுப் போனதன் பின்னர் இன்று வரை யுத்தக் கொடூரத்தை அனுபவித்து வருபவர்கள் முன்னாள் போராளிகள் என்ற உண்மையை சொல்லித்தானாக வேண்டும்.

நாட்டில் எந்த மூலையில் என்ன குழப்பம் நடந்தாலும் அந்தச் சம்பவத்துடன் முன்னாள் போராளிகளைத் தொடுக்கின்ற கொடுமைத்தனம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இதனால் முன்னாள் போராளிகளின் நாளாந்த வாழ்வு என்பது ஏக்கம் நிறைந்ததாகவும் பயம் கொண்டதாகவும் அமைந்திருப்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

2009ஆம் ஆண்டு மே மாதத்துடன் யுத்தம் நின்று போனாலும் முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வும் அவர்களைச் சிறையில் அடைத்து வதைப்பதுமான நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

புனர்வாழ்வு வழங்கப்பட்ட பின்னரும் அவர்களை கைது செய்வது, இராணுவ முகாமுக்கு அழைப்பது, புலனாய்வுப் பிரிவினர் விசாரிப்பது என்ற தொந்தரவுகளுக்கு அவர்கள் முகம் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இப்போது யாழ்ப்பாணத்தில் இரண்டு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதிலொன்று நல்லூரில் நீதிபதி இளஞ்செழியன் மீது நடந்த துப்பாக்கிப் பிரயோகம் மற்றையது கொக்குவிலில் இரண்டு பொலிஸார் மீது நடந்த வாள்வெட்டுச் சம்பவம்.

இச்சம்பவங்கள் தொடர்பில் இந்த நாட்டின் அனைத்து தரப்புக்களும் கவனம் செலுத்தியுள்ளன.

அதிலும் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இச்சம்பவங்கள் தொடர்பில் தமது கருத்துக்களை அவசரமாகப் பதிவு செய்துள்ளனர்.

தவிர இச்சம்பவங்களை அடுத்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்துள்ளார்.

அந்த ஆய்வுகளின் பின்னர் அவர் விடுத்த அறிவிப்பில் நடந்து முடிந்த சம்பவங்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் தொடர்பு உண்டு என்பதாகக் கூறியுள்ளார்.

ஆக, மீண்டும் முன்னாள் போராளிகள் மீது விசாரணைகளும் விளக்கங்களும் நடப்பதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுவது தெரிகின்றது.

தாமும் தம் பாடும் என்றிருக்கின்ற முன்னாள் போராளிகளுக்கு மீண்டும் இடுக்கண் கொடுப்பதற்கான சதிவேலைகள் நடப்பது தெரிகின்றது.

உண்மையில் முன்னாள் போராளிகளும் அவர்களின் குடும்பங்களும் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். அவர்களின் சீவனோபாயம் என்பது இடர்பாட்டில் உள்ளது.

முன்னாள் போராளிகள் என்பதற்காக அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுவதில் கூட புறக்கணிப்புக்கள் இருப்பதான தகவல்களை பொது அமைப்புக்கள் பதிவு செய்துள்ளன.

இந்த வேலைவாய்ப்பு புறக்கணிப்பு என்பது தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டிலும் நடப்பதாகக் கூறப்படுகிறது.

இதுதவிர முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இசைந்து வாழ்வதில் கூட பலத்த கஷ்டங்களை சந்தித்துள்ளனர். இந்நிலைமை தமிழ் மக்கள் சமூகத்திலேயே இருக்கும் போது முன்னாள் போராளிகள் என்பவர்கள் உடல், உள, சமூக ரீதியில் சதா தண்டிக்கப்படுகின்றனர் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப்பாணத்தில் நடந்த பொலிஸார் மீதான வாள் வெட்டுச் சம்பவத்துக்கும் முன்னாள் போராளிகளுக்கும் தொடர்புண்டு என பொலிஸ்மா அதிபர் கூறியிருப்பது முன்னாள் போராளிகளையும் அவர்களின் குடும்பங்களையும் அதிர்ச்சிக்குட்படுத்தியுள்ளது.

எனவே எதற்கெடுத்தாலும் முன்னாள் போராளிகளை குற்றம் சாட்டுவதை விடுத்து உண்மையை கண்டறிவது மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் குற்றச்செயல்களை தடுப்பதற்கும் உதவுவதாக இருக்கும்.

# கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலாளர் சம்பந்தனுக்கு கடிதம்

(கொழும்பு)

கேப்பாபிலவு காணி விடுவிப்பு தொடர்பில் கடந்த புதன்கிழமை மீள்குடியேற்ற அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடியதன் பின்னர் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு உரித்தான முல்லைத்தீவு, கேப்பாபிலவுக் காணி தொடர்பாக ஜனாதிபதிக்கு கடந்த 20ஆம் திகதி அனுப்பப்பட்ட தங்களது கடிதம் தொடர்பாக நான் பாதுகாப்புச் செயலாளருடனும், இராணுவத் தலைமைக் கட்டளை அதிகாரியுடனும் பொதுவாகக் கலந்துரையாடியுள்ளேன்.

தங்கள் கோரிக்கை தொடர்பாக அவர்களும் இணக்கம் தெரிவித்துள்ள போதும், தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் காலவரையறையைப் பொறுத்தமட்டில் சில மட்டுப்படுத்தல்களை அவர்கள் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

அதன்படி, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பிவர வேண்டிய தேவையையும் நல்லிணக்கச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு காலவரையறை தொடர்பில் விட்டுக்கொடுத்து ஒத்துழைக்கும்படி நான் அவர்களைக் கோரியுள்ளேன்.

அதற்கமைவாக, முடிந்த வரை விரைவாக இக்காணிகளை முறைப்படி விடுவிக்கும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவர்களது ஒப்புதல்களை வழங்குமாறு பாதுகாப்புச் செயலாளருக்கும் இராணுவத் தலைமைக் கட்டளை அதிகாரிக்கும் தங்கள் கோரிக்கையை முன்னளிக்கின்றேன்.

மேலும், தங்களது கோரிக்கை தொடர்பாக நான் ஜனாதிபதிக்கும் வாய்மொழி மூலம் தெரியப்படுத்தியுள்ளதோடு, அவர் இடம்பெயர்ந்தோர் விடயத்தில் உதவுவதற்குத் தானும் அக்கறையோடு செயற்படுவதாகத் தெரியப்படுத்தினார்.

எதிர்காலத்தில் இது விடயமாக நாங்கள் மேற்கொள்ளவுள்ள இணக்கச் செயல்முறைகள் பற்றி நான் தங்களுக்கு அறியத்தரும் வரை என்னுடன் பொறுமையுடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது. (மு)

# நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவரும் (2004 உயர்தரம்) யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல், நிலக்சன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தினமான நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள (நீதிமன்ற வளாகத்திற்கு அருகாமையில்) ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் மாலை அணிவித்து மலரஞ்சலியும் சுடரேற்றலும் நடைபெற்றது.

பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் கலையரங்கில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

அகவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் நிலக்சனின் உருவப்படத்திற்கு அவனது குடும்பத்தினர் மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நிகழ்வில் பங்கேற்றவர்கள் சுடரேற்றி அஞ்சலித்தனர். தொடர்ந்து நிலக்சனின் பெற்றோர் பொதுச் சுடர் ஏற்றினர். வரவேற்புரையைத் தொடர்ந்து தலைமையுரை, கவிதாஞ்சலி என்பன இடம்பெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டில் சிறந்த பெறுபேறு பெற்று பட்டம்பெறும் ஊடகத்துறை மாணவனுக்கான, சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் - அறிமுக நிகழ்வு நடைபெற்றது.

நிலக்சனின் கல்லூரிக் கால நண்பர்களால் உருவாக்கப்பட்ட தங்கப்பதக்க அறிவிப்பை நிலக்சனின் பெற்றோர் வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி மு.சுதாகர் அதனைப் பெற்றுக்கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

தொடர்ந்து ஓய்வுநிலை அதிபர் அ. பஞ்சலிங்கம், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம முகாமையாளர் ஆ. சத்தியமூர்த்தி மற்றும் ஊடகவியலாளர் ஊடக வளவாளர் ஜனகேஸ்வரன் ஆகியோரின் நினைவுரைகள் நடைபெற்றன.

நிகழ்வின் இறுதியாக தற்கால சூழலில் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் சவால்கள் எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளரும் ஊடக கற்கைகள் அலகு இணைப்பாளருமான கலாநிதி எஸ்.ரகுராம் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

நன்றியுரையை ஊடகவியலாளர் அ.யசிகரன் ஆற்றியிருந்தார். (மு-9)

## அரசாங்க பாடசாலைகளுக்கு விடுமுறை

அரசாங்க பாடசாலைகளுக்கான 2ஆம் தவணை விடுமுறை எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளன.

மீண்டும் பாடசாலைகள் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி மூன்றாம் தவணைக்காக திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (மு-11)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**திருமணப் பொருத்தம்**
**திருமணப் பொருத்த நிலைகள் எத்தனை வகைப்படும்?**

தினப் பொருத்தம், கணப் பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், ஸ்திரீ தீர்க்கம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசி அதிபதி பொருத்தம், வசியப் பொருத் தம், ரச்சுப் பொருத்தம், வேதைப் பொருத்தம், நாடிப் பொருத்தம்.(தொடரும்)

## கண்பூ / கற்றாக்ற்

கண்ணில் ஏற்படும் வெள்ளையை இலகுவாக சத்திர சிகிச்சை மூலம் நீக்கி கண் வில்லை ஒன்றை உட்பதித்து சாதாரண பார்வையை பெற்றுக்கொள்ள முடியும்.
அரசாங்க பொது வைத்தியசாலைகளில் இதனை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### முதலில் கடவுளைத் தேடு



✦ முதலில் கடவுளைத் தேடு. அதன்பின், உலகப் பொருட்களை தேடி செல்லலாம்.

✦ எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார். ஆனால், கடவுளிடத்தில் எல்லா மனிதர்களும் இருப்பதில்லை.

✦ மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரிதானது. இதை பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.

✦ கடவுளின் திருநாமத்தை இடைவிடாது ஜெபித்தால் உடல், மனம் எல்லாம் தூய்மை பெறும்.

✦ நம்பிக்கை ஆழமானால் கடலையும் தாண்டலாம்.




உன்னைப் பார்த்தாலே என் இதயம் இளகுகிறது. நீ யார்? இக்காட்டில் தனியாகச் சுற்றித் திரியக் காரணம் என்ன? என்னை உன் அன்னையாக எண்ணி எடுத்துச் சொல் கண்மணி... என்று வினவினாள்.

கார்வண்ணன் உள்ளுக்குள் ஒரு கள்ளப் புன்னகை பூத்துக் கொண்டான்.

அகத்தில் இருப்பதை முகத்தில் காட்டாமல் அந்த முகுந்தன், அம்மா... நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி. எவ்வளவோ துன்பங்களை எய்தி, இந்த இடத்தை வந்தடைந்தேன். ஆதரிப்பார் யாருமற்ற அநாதை நான். இதற்குமேல் எடுத்துச் சொல்ல எதுவும் இல்லை. உன்னில் என் தாயைக் காண்கின்றேன். என்னை உன் மகனாக ஏற்றுக்கொள்வாயா அம்மா? என்று நெகிழ்ந்த குரலில் நேசம் குழைத்துச் சொன்னான்.

அதைக் கேட்ட வகுளாதேவி விக்கித்து அழத் தொடங்கினாள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் சென் மைக்கல் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்டம்

## அரையிறுதியில் விண்மீன்





உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்திவரும் உதைபந்தாட்ட தொடரில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து ஐயனார் அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பலாலி விண்மீன் முதல் பாதியாட்டத்தில் 1:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தது.

பிற்பாதியாட்டத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விண்மீனால் மீண்டும் ஒருகோல் போடப்பட்டு ஆட்ட நேர முடிவில் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

விண்மீன் அணி சார்பில் காண்டீபன் 1. நிஷாந்தன் 1 கோல்களைப் போட்டு அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். (க)

# கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது திக்கம் இளைஞர்கள்





அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (31.07.2017) அன்று நடைபெற்ற போட்டியில் திக்கம் வி.கழகத்தை எதிர்த்து றேஞ்சஸ் வி.கழகம் மோதியது. ஆட்ட நேர முடிவில் 0:0 என்று சமநிலையில் முடிவுற்றது

சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் 4:2 என்று திக்கம் வி.கழகம் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக திக்கம் வி.கழகத்தை சேர்ந்த உமேஷ் தெரிவு செய்யப்படடார். (க)

# நாணயச்சுழற்சி மூலம் சென்.அன்ரனிஸ் வெற்றி



சென் மைக்கேல் விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டி 01.08.2017 செவ்வாய்க்கிழமை அன்று உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

யங்கென்றிஸ்க்கும் ,பாசையூர் அன்ரனிஸ்க்கும் இடையே இடம் பெற்ற பேட்டியில் 1-1 என சமனிலையில் முடிவுக்கு வந்தது.

வெற்றியை முடிவு செய்வதற்காக சமனிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.இச் சம நிலை தவிர்ப்பு உதையும் 9-9 என முடிவு பெற நாணயச்சுழற்சி மூலம் பாசையூர் சென் அன்ரனிஸ் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# யாழ்.மாவட்ட சம்பியனாகியது தெல்லிப்பழை யூனியன் வி.கழகம்



யாழ்ப்பாண வலைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட வலைப் பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் யூனியன் அணி 16:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது. அந்த அணி தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்து முடிவில் 34:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

முதன்மை விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலளர் திருமதி சுபாசினி மதியழகனும், சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபர் வேணுகா சண்முகரெத்தினமும், பவுண்டேசன் ஒவ் குட்நஸ் நிறுவனத்தின் வடக்கு மாகாணத்தின் இணைப்பாளர் எட்வேட் எடினும் கலந்து கொண்டனர். (க)

# மீண்டும் மகுடம் சூடியது ஆனைக்கோட்டை யூனியன்



கொக்குவில் காமாட்சி அணியை இலகுவாக வீழ்த்தி புத்தூர் குமரகுருபரர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டுள்ளது ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம்.







அரியாலை பிறீமியர்லீக் கிரிக்கெட் தொடரின் சீருடைஅறிமுக நிகழ்வும் பாடல் வெளியீட்டு நிகழ்வும் (31.07.2017) இரவு 7 மணிக்கு அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச.நிலைய மண்டபத்தில் நடைபெற்ற போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47 அத்தியாவசிய...

தற்பொழுது நாட்டில் பல மாவட்டங்களில் நிலவும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக எதிர்வரும் 2 மாதங்களுக்கு 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொதியொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ அரிசிக்காக ரூபாய் 5 அல்லது விசேட பொருட்கள் வர்த்தக வரி(SCL) 25 %மாக குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ அரிசிக்கான இந்த 25 சத புதிய வரி 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும்.

இறக்குமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட மீனுக்கான (Wet Fish ) விசேட வர்த்தக பொருட்கள் வரி ரூபாய் 50 இனால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இறக்குமதி செய்யப்படும் மீன்வகைகளில் தலபத் மற்றும் கொப்பறா ஆகிய மீன்கள் 1 கிலோவிற்காக இதுவரையிலிருந்த 75 ரூபாய் விசேட வர்த்தக பொருட்கள் வரி 25 ரூபாயாக குறைக்கப்படுகின்றது.

கடற்றொழில் அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த புதிய விலைக்குறைப்பு எதிர்வரும் 3 மாதங்களுக்கு செல்லுபடியானதாகும்.

கோழி உணவு தயாரிப்பிற்காக பயன்படுத்தப்படும் சோளத்திற்காக இறக்குமதி வரி அனைத்தும் நீக்கப்பட்டு ஒரு கிலோ சோளத்திற்கு ரூபாய் 10 என்ற புதிய விசேட வர்த்[illegible] பொருட்கள் வரி நேற்று முதல் அமுலுக்கு வருகின்றது.

இதுவரையில் சோளத்திற்காக 15சதவீத இறக்குமதி வரியும் 15 சதவீத வற் வரியும் 7.5 சதவீத துறைமுக மற்றும் விமான நிலைய வரியும் 2 சதவீத தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரியும் 35 சதவீத செஸ் வரியும் அறவிடப்பட்டது.

இந்த அனைத்து வரிகளையும் ஒன்று சேர்க்கும் போது இறக்குமதி செய்யப்படும் சோளம் 1 கிலோவிற்காக இதுவரையில் ரூபாய் 60 தொடக்கம் 70 வரையிலான தொகை வரியாக செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. எதிர்வரும் 6 மாதகாலப்பகுதிக்கு இந்த அனைத்து வரிகளும் நீக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சோளத்திற்காக ரூபாய் 10 விசேட வர்த்தக பொருட்கள் வரி மாத்திரம் அறவிடப்படும்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ [illegible]விற்கான செஸ்வரி ரூபாய் 25 இலிருந்து 15 ரூபாய் வரையில் ரூபாய் 10 இனால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கோதுமைத் தானியம் மீது விதிக்கப்பட்டிருந்த வரி ஒரு கிலோவிற்கு 9 ரூபாயிலிருந்து 6 ரூபாய் வரையில் அதாவது 3 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இறக்குமதி வரி மற்றும் விசேட வர்த்தக பொருட்கள் வரி குறைக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் எதிர்வரும் தினங்களில் குறைவடையும்.

நுகர்வோரான பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரிசி ,சீனி, கிழங்கு, பெரிய வெங்காயம் உள்ளிட்ட 47 அத்தியாவசிய பொருட்களுக்கான பல்வேறு வரிகள் நீக்கப்பட்டு இவற்றிற்காக விசேட வர்த்தக பொருட்கள் வரி அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த விவசாய உற்பத்தி பொருட்கள் சந்தைக்கு வரும் சந்தர்ப்பத்தில் விவசாயிகளை பாதுகாப்பதற்காக இந்த வர்த்தக பொருட்கள் வரி அந்தந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினால் அதிகரிக்கப்படும் எனவும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (மு-11)

# சாவகச்சேரியில்...

யில் இடம்பெற்றுள்ளது. டச்சுவீதியில் வசிக்கின்ற குடும்ப பெண்மணியொருவர் நகரத்திலுள்ள கடையொன்றுக்கு செல்வதற்காக டச்சு வீதி வழியாக நடந்து சென்றுள்ளார்.

இதன்போது டச்சுவீதியில் நவீன சந்தைக்கு 100 மீற்றர் தொலைவில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த திருடன் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

6 பவுண் தாலிக்கொடியே அறுக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டு தொடர்பாக அப்பகுதியில் உள்ள சி.சி.ரி.வி கமராக்களின் உதவியுடன் திருடனை கைது செய்வதற்கான முயற்சிகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (மு-89)

# பயங்கரவாத...

அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்குப் பின்னர் நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்படவில்லை என்றும் சமாதானமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படவில்லை என்றும் வெளிநாடுகளுக்கு காட்டுவதற்காகவே சிறு சிறு குழுக்கள் இயங்கி வருவதாகவும் அக்குழுக்களின் செயற்பாடுகள் இத்தகைய வன்முறைச் சம்பவங்களுக்கு காரணமென்றும் சுட்டிக்காட்டிய பொலிஸ்மா அதிபர், அவை ஊடகங்களின் ஊடாக வெளிவருவதால் பாரியளவிலான விடயமாக பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

எனவே யாழில் நடக்கின்ற அசம்பாவிதங்களைத் தடுத்து நிறுத்தி இவ்வாறான குழுக்களின் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் உட்பட சகல தரப்பினர்களும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுவினரை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.இக் கலந்துரையாடல் யாழ்.பொலிஸ் நிலைய மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதன் போது அங்கு உரையாற்றுகையிலையே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கின்றேன். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிற்கும் செல்லவிருக்கிறேன். யாழில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருகின்ற சம்பவங்களையடுத்தே வடக்கிற்கு வந்திருக்கிறேன். இந்த விஜயத்தின் நோக்கம் இங்கு ஏற்பட்டிருக்கின்ற அசாதார சூழ்நிலைகளையடுத்து இங்குள்ளவர்களின் மன எண்ணங்கள் மற்றும் அதற்குரிய தீர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே ஆகும்.

குறிப்பாக இங்கு இடம்பெறுகின்ற வாள் வெட்டு, மணல் கடத்தல், களவு, கொலை போன்ற அசம்பாவிதங்கள் அதிகரித்து வருகின்றன. இவை தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டத்தை சரியாக அமுல்படுத்த வேண்டும். இதற்காகத் தான் இராணுவம், கடற்படை, விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் உதவிகள் தேவைப்படுகின்றன.

இதேவேளை இச் சம்பவங்களுக்கு முன்னாள் போராளிகளும் காரணமாக உள்ளனர். அதாவது இச்சம்பவங்களை புனர்வாழ்வு பெறாத முன்னாள் போராளிகளே மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு நிலைமைகள் இருக்கின்ற போது கடந்த 30 வருட காலம் நிலவிய பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோமென சொல்வது என்னால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத காரியம். அதற்குரிய விதையாவது இருக்கும்.

இதேவேளை நாட்டில் சமாதான சூழல் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் சமாதானமாக வாழக் கூடிய நிலைமை இல்லை என்பதனை சர்வதேச நாடுகளுக்கு தெரிவிப்பதற்காக இவ்வாறான தரப்பினர்கள் உள்ளிட்டவர்கள் சிறு சிறு குழுக்களாக இயங்கி வருகின்றனர். இவர்களே அசம்பாவிதங்களை ஏற்படுத்தி அசாதாரண சூழலை ஏற்படுத்துகின்றனர். இதனை ஊடகங்கள் வெளியிடுகின்ற போது அந்த விடயங்கள் பாரியதானவையாக பார்க்கப்படுகிறது.

ஆகையினால் தான் இதனை நிறுத்த வேண்டியது அவசியம். இவ்வாறான குழுக்களின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தி சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும். அத்தோடு வடக்கில் நடைபெறுகின்ற சம்பவங்கள் தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. இதற்காகத்தான் இராணுவ, கடற்படை, விசேட அதிரடிப்படை ஆகியவற்றின் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் பயங்கரவாதம் இருந்ததால் இராணுவத்தினருடன் இணைந்து பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்பட்டிருந்தோர். தற்போது சமூகத்தோடு இணைந்து சமூகத்தை நல்வழிப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தையும் இணைந்துக் கொண்டு செயற்படவுள்ளோம். அத்தோடு பொது மக்களாகிய உங்களது ஒத்துழைப்பு வேண்டும் என்றார்.

தற்போது பிரதானமாக சிலவற்றைச் செய்ய வேண்டி உள்ளது. அதில் முதலாவது தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது அனைவரதும் கடமையாகும். பாரிய குற்றங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு இருக்கின்றது. ஆகவே இங்கு நடைபெறும் சட்ட விரோத மற்றும் சமூகவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸாருடன். இராணுவத்தினரும் சேர்ந்து செயற்படுகின்ற நிலையில் பொது மக்களும் ஒண்றிணைந்து செயற்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இக் கலந்துரையாடலில் மதத் தலைவர்கள் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், சிவில் சமூக உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (மு-4)

# நிறைவேற்று...

மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தானது நிறைவேற்று அதிகாரத்தை விடவும் அதிகமான பலத்தை உபயோகிப்பதற்கு சமமான செயலென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் பொருளாதார விவகாரங்களுக்கான பிரிவின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தலைகளின் எண்ணிக்கையை மாற்றி ஆட்சியை கைப்பற்றுவதற்கு எவர் கனவு கண்டாலும், அதற்கு தனது விருப்பத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றில் 113 ஆசனங்களை பெற்ற பின்னர் அரசாங்கமும், ஜனாதிபதியும் முறிவடைந்து விடுவார்களென எதிர்க்கட்சி உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்களும் தேசிய பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளமை தொடர்பிலும், கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இந்த கருத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜீ.எல்.பீரிஸ் கொள்ளையர்களையும், ஊழல்வாதிகளையும் பாதுகாப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும், உறுப்பினர்களும் தொடர்ந்து துணை போவார்களா என்பது கேள்விக் குறியே. அது தொடர்பில் ஜனாதிபதி புதுமையான கருத்து ஒன்றை முன்வைத்துள்ளார். அதாவது அவரது ஆசீர்வாதம் இல்லாமல் 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்தாலும் ஆட்சியமைக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல் குழப்பமொன்று ஏற்பட்டுள்ளது. சரியான கொள்கையுடன் செயற்படும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு அந்த இடத்தில் இருக்க முடியாது. இது அரசியலை கொண்டு நடத்துவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை. அதனாலேயே அவர்கள் அங்கிருந்து வெளியேற தீர்மானித்துள்ளனர். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையின் ஏகாதிபத்திய உருவத்தை இல்லாது செய்வதாக ஆரம்பத்திலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார். நாடாளுமன்றத்தை அதிகாரமுள்ள சபையாக மாற்றுவதாக கூறினார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை கொண்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்தன கூட வெளியிடாத கருத்தை தற்போதைய ஜனாதிபதி கூறியுள்ளார். பெரும்பான்மையானவர்கள் விருப்பமின்றி அரசாங்கத்தை விட்டு வெளியேறி புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினால் அதற்கு ஜனாதிபதி இணங்காவிடின் எங்கிருந்து நிதியை பெற்றுக்கொள்வது? ஜனாதிபதி வெளியிட்டுள்ள இந்த கருத்து அரசியல் யாப்பிற்கு முரணானது. மக்களுக்கு வழங்கிய வாககுறுதிகளை அவர் மறந்து பேசுகின்றார். இந்த நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக ஒத்திவைத்து வருகின்றது அரசாங்கம். நாம் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்கின்றோம். நாடு முழுவதும் போராட்டங்கள் தொடர்கின்றன. பொது மக்களின் ஆணையை கண்டு இந்த அரசாங்கம் அஞ்சுகின்றது. இந்த அரசாங்கம் நல்லதா கெட்டதா என்பது தொடர்பில் கருத்து தெரிவிக்க மக்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். இதுவா இணக்கம் தெரிவித்த மாற்றம். ஆகவே தேர்தலை நடத்துமாறு நாம் அரசாங்கத்திடம் வேண்டுகின்றோம் என்றார் பீரிஸ். (மு-11)

# மகிந்தவுக்கு...

காரிகள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து ஊடகவியலாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பியிருந்தனர். இதற்கு பதிலளித்து பேசிய அவர்,

விடுதலைப் புலிகளின் ஆரம்ப காலத்தைப் போன்று வடக்கில் தற்போது அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருகின்றன. இது பயங்கரவாதத்தின் ஆரம்பமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அண்மையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியை இலக்கு வைத்து நல்லூரில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமும் இதனையே எடுத்து காட்டுகின்றது.

இந்நிலையில், பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குகின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆரம்பம் முதல் எச்சரிக்கை விடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(மு-11)

# நல்லாட்சி...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகிக் கொண்டாலும், தொடர்ந்தும் தமது கூட்டணி ஆதரவளிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

சில தரப்புக்கள் அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சித்த போதிலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி அவ்வாறு செய்யாது என குறிப்பிட்டுள்ள அவர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் காரணமாக இந்த அரசாங்கத்தினால் மக்களுக்கு அபிவிருத்தித் திட்ட நலன்களை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் சட்டம் சமமாக அமுல்படுத்தப்படும் என குறிப்பிட்டுள்ள அவர் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் உண்மையா என்பது தெரியாது எனவும் அவ்வாறு உண்மையென்றால் அவருக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (மு-11)

# வடக்கில் சிற...

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வலியுறுத்தினார்.

யாழ்.மாவட்டத்தில் வாள்வெட்டு சம்பவங்களை காரணம் காட்டி முப்படைகளை பயன்படுத்துகின்ற நடவடிக்கையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்கமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திற்கு இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர யாழ்.மாவட்டத்தில் வாள் வெட்டு சம்பவங்கள் அதிகரித்திருக்கும் நிலையில் அவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக முப்படையினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பயன்படுத்தப்படுவார்கள் என கூறியிருக்கும் கருத்து தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸார் நேர்மையாக செயற்பட்டால் வாள்வெட்டு குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தலாம். பொலிஸார் நேர்மையாக செயற்பட்டால் பொதுமக்களும் தங்கள் பூரணமான ஒத்துழைப்பை வழங்குவார்கள். இவ்வாறான வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இருந்து எவ்வாறு...

புனர் வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப் படுத்தப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உரியவகையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதா என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும் என்று சுதந்திரக் கட்சி மேலும் கூறியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சருமான மஹிந்த சமரசிங்கவிடம் யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் பொலிஸார் மீது நடத்தப்பட்டுள்ள வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர்..

இதற்கு பதிலளித்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க யாழ்ப்பாணத்தில் பொலிஸார் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. பொலிஸார் ஊடாக காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களால் தான், வடக்கிலிருந்து படைமுகாம்களை அகற்ற முடியாதுள்ளது. மேற்குலகும் இதை புரிந்து கொள்ள வேண்டும். 30 வருடங்களாக நாட்டில் யுத்தம் நடைபெற்றது. தற்போது ஐக்கியம் பற்றி பேசப்பட்டு வருகின்றது. எனவே. எடுத்த எடுப்பில் முகாம்களை அகற்றிவிட முடியாது.

சுமார் 12 ஆயிரம் வரையான போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப் படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உரிய வகையில் புனர் வாழ்வளிக்கப்பட்டதா என்பது பற்றி ஆராய வேண்டும். எனவே, பாதுகாப்பின் நிமித்தம் வடக்கில் முகாம்கள் இருக்கவேண்டுமென்றார். (மு-11)


## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியின் பிரபல புத்தகசாலையில் பணி நிலை வெற்றிடம். சாதாரண கணனி அறிவு, நல்ல தொடர்பாடல் ஆளுமையுடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். அல்லது சுயவிபரத்தை அனுப்பவும்.

தொ.பே.இல. / Viber : 077 673 7535

(C-9230)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1 kg 450 மட்டும்

கூடுதல் கொள்வனவுக்கு 430 மட்டும்.

U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை

077 868 9500 (003)




# படையினர் காணி விடுவிப்பு...

வொன்றின் போது உரையாற்றிய அவர் காணிகளை மீள அளிக்கும் நடவடிக்கையில் சில கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும்.

எனினும் இந்த காணி விடுவிப்பானது வடக்கில் பணியாற்றும் படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நல்லுறவை வலுப்படுத்தும்.

தற்போது நடப்பவை சிறப்பாக நடைபெறுகின்றன.

தொடர்ந்தும் இதைவிட சிறப்பான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என டோரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான படைக்கள உறவுகள் மேம்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போருக்கு பின்னரான நல்லிணக்கம் தொடர்பில் பிரித்தானியாவை பொறுத்தவரை அது வட அயர்லாந்தின் சொந்த அனுபவங்களை கொண்டிருக்கின்றது. உண்மை, பொறுப்புக்கூறல் தேசியநலன், படைகள் தொடர்பான அக்கறை மற்றும் படையின் நவீனத்துவம் என்பன இதன்போது முக்கியத்துவம் பெறுவதாக டோரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பயங்கரவாதம், தீவிரவாதம், இணையத்தள அச்சுறுத்தல்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## இன்று...

தினம் யாழ் மேல் நீதிமன்றின் மூன்றாம் மாடியில் நடைபெறவுள்ளது.

இவ் வழக்கின் நீதாய விளக்க (ட்ரயல் அட்பார்) விசாரணைகள், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வழக்கு தொடுநர் தரப்பில் பிரதி மன்றாதிபதி பி.குமாரரட்ண மற்றும் அரச சட்டவாதிகளான நாகரட்ணம் நிஸாந், ஜெயலக்ஸி சில்வா, மாதுரி விக்னேஸ்வரன் ஆகியோர் நெறிப்படுத்தி வருகின்றனர். (மு-9)

## வேலை...

இதேபோல ரயில் எஞ்சின் ஓட்டுநர்கள் நேற்று நள்ளிரவு முதல் மேற்கொள்ள விருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தையும் தற்காலிகமாக கைவிட தீர்மானித்துள்ளனர்.

போக்குவரத்து பிரதியமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (மு-11)

## யாழில்...

கறுப்புத் துணிகளை சுற்றி சந்தேகத்துக்கிடமான சிலர் நடமாடுவதை இனம் கண்டுள்ளனர்.

இருந்த போதிலும் திருடர்கள் துணிவுடன் வீடுகளுக்குள் புகுந்து மடிக் கணனி மற்றும் நகைகள் போன்ற பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

பொலிஸாருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கும் சூழலில் மேற்படி பகுதிகளில் பொது மக்களை திருட்டுக்கும் பல் அச்சுறுத்தி திருடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவங்கள் குறித்து யாழ். பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (மு-51)

## பொலிஸா...

சகரின் உத்தரவுக்கமையவே பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும், நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவையும் முன்னிட்டே பொலிஸாரின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டிருக்கலாம் என கூறப்படுகின்றது.

இந் நிலையில் பொலிஸ்மா அதிபர் நேற்றைய தினம் யாழிற்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பிலும் ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## பொலிஸார்...

பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸார் மீது ஆவா குழுவினைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்லப்படும் 10 ற்கும் மேற்பட்ட நபர்கள் வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

வாள்வெட்டிற்கு இலக்காகிய இரு பொலிஸாரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் யாழில் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.


இந்நிலையில், ஆவா குழுவின் முக்கிய நபர்கள் 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் நேற்றுக்காலை குறித்த தாக்குதலுடன் தொடர்புடைய ஆவா குழுவைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு-4)

# மரண அறிவித்தல்

## வேலாயுதம் குமாரசாமி

(ஓய்வுபெற்ற தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர், அகில இலங்கை சமாதான நீதவான்)



*140 (50), சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் குமாரசாமி கடந்த ஞாயிற்றுக்கிழமை (30.07.2017) காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவஞானமணி அவர்களின் அன்புக் கணவரும், சிவகுமார் (பெல்ஜியம்), ஜெயக்குமார் (கனடா), இந்திரகுமார் (நிலையப் பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர், பருத்தித்துறை நீதி நிர்வாகப் பிரிவு), தேவ்குமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பவானி (பெல்ஜியம்), குணரஞ்சினி (கனடா), ரஞ்சினி (சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர், மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மாலினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, பராசக்தி மற்றும் கந்தசாமி, கதிர்காமநாதன் (ஜேர்மனி), ராணி, லோகேஸ்வரி, ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்றவர்களான மகேந்திரன், குணரத்தினம் மற்றும் இராமநாதன் (நாதன் உணவகம், நல்லூர்), சரோஜினி, மகாதேவன், யோகம், தவமணி (குப்பிழான்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற க.சொக்கலிங்கம் (ஆசிரியர் - குப்பிழான்), அவர்களின் அன்புச் சகலனும், சிந்துஜா, திவ்ஜா, சஞ்ஜீவகன், சிவரூபி, அஞ்சுகா, வினு, அரன், வைஷ்ணவி, சுவாதிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், கைலாஷ், கார்த்திகா, கிருத்திஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2017) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு முற்பகல் 11.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.*

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி : 140, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (002)

தகவல் : கு.இந்திரகுமார் (மகன்)
தொ.பே: 021 222 6158, 077 612 0364


## விற்பனைக்கு

- கட்டிட இடிபாடு
- சுண்ணாம்பு மக்கி
- செம்பாட்டு மண்

என்பன விற்பனைக்குண்டு. (004)

தொடர்பு:
075 515 9089

## முகாமைத்துவ உதவியாளர் தேவை

வெளிநாட்டு மொழி கற்பிக்கும் நிறுவனத்திற்கு A/L 3 சித்தியுடன் 6km க்குள் வசிக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளோர் நாளை (03.08.2017) வியாழன் 3.30 மணிக்கு CV யுடன் நேரில் வரவும்

No. 40, Palaly Road, ஆரியகுளம்.
T.P : 0779 789 456. (C-9227)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-9206)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

♦ யாழ்ப்பாணம் ♦ கிளிநொச்சி ♦ நெல்லியடி ♦ பருத்தித்துறை ♦ வல்வெட்டித்துறை ♦ சாவகச்சேரி

## FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளரிடம் இலகுவான முறையில் French கற்றுக்கொள்ளுங்கள் (ஆங்கில அறிவு அவசியமில்லை)

2006 முதல் இன்று வரை 1291 மாணவர்கள்...

DELF A1, A2, B1, B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

40, பலாலி வீதி, ஆரியகுளம்
ஆரம்பம்: 05.08.17 சனி 8 am
0779789456/ 0212217781

181, பிரதான வீதி, நெல்லியடி
ஆரம்பம்: 14.08.17 திங் 4 pm
0213202973

IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்...

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் (முன்பாக)

(C-9213)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-9215)

CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org